விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 26 வெள்ளிக்கிழமை (08.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 172

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கூட்டமைப்பு இல்லாத தெரிவுக்குழுவில்

# ஐக்கிய தேசியக் கட்சி பங்கு பற்றாது!

## இரா.யோகராஜன் அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அரசால் முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இடம்பெறாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி பங்கு பெறாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்திலேயே இந்த விடயம் விவாதிக்கப்பட்டு முடிபெடுக்கப்பட்டதாக அக்கட்சியின் உறுப்பினர் இரா.யோகராஜன் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு எதிராக தொடரும் வழக்கு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தியதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை தொடர்ந்து நடத்துவது என்று கொழும்பு மேல் நீதிமன்றம் முடிபு செய்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு நேற்று அழைக்கப்பட்டபோது அது பெரும்பாலும் வாபஸ்பெறப்படும் என்று பல தரப்பாலும் எதிர்பார்க்கப்பட்டாலும் அதனை தொடர்ந்து நடத்துமாறு அரச சட்டவாதி கேட்டுக் கொண்டதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. எதிர்வரும் 21-ம் திகதி முதல் இந்த வழக்கு விசாரணை செய்யப்படும். (19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் கூரேக்கு எதிராக கோவையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

கோவையில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிறுவன நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற விவசாயத்துறை அமைச்சர் ரெஜினோல்ட் கூரே, ம.தி.மு.க உட்பட சில கட்சிகள் மற்றும் தமிழ் அமைப்புக்களின் எதிர்ப்பின் விளைவாய் அந்த நிகழ்ச்சியில் பங்கு பெறாமல் நாடு திரும்பியிருக்கிறார்.

நேற்று நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் பங்குபெறவென நேற்றுமுன்தினம் கோவை சென்றார் அமைச்சர்.

கரும்பு ஆராய்ச்சி நிறுவன நிகழ்ச்சி குறித்து அறிந்த அமைப்புகள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக ஊடகங்களுக்கு தெரிவிக்க பொலிஸாரின் ஆலோசனையின் பேரில் நேற்றுக் (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்கம் ஏற்பட இணக்கப்பாடு அவசியம்

### அமைச்சர் பீரிஸிடம் பிரி. வலியுறுத்தல்

(லண்டன்)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுடன் வெளிப்படையான முறையில் உறுதியான பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய மகாராணியின் வைரவிழா நிகழ்வில் பங்கேற்க ஜனாதிபதியுடன் லண்டனுக்கு சென்ற அமைச்சர் பேராசிரியர் பீரிஸை பிரித்தானிய (19ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களுக்கு இனி முட்டையும்!

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உணவுக்கு மேலதிகமாக முட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் பாடசாலைகளின் உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் பாடசாலை உணவு செயற்றிட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நடை (19ஆம் பக்கம் பார்க்க)

## புதிய போர்க்குற்ற ஆதாரத்தை வெளியிட்டது இன்டிப்பென்டன்

### ஜனாதிபதி லண்டனிலிருந்தபோது வெளியானது

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் தமக்கு புதிய வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக இலண்டனில் இருந்து வெளியாகும் தி இண்டிப்பெண்டன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்போரின்போது தமிழ் மக்கள் நீதிக்குப் புறம்பான வகையில் எந்தளவுக்கு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதை இந்த ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன என இவ்வூடகம் சுட்டிக்காட்டியுள்ளபோதும் இந்த ஆதாரங்களின் வீடியோ பதிவுகளை இப்பத்திரிகை வெளியிடவில்லை.

மகாராணியுடன் மகிந்த விருந்துண்ட நேரத்தில் (19ஆம் பக்கம் பார்க்க)

## மூவினத்தவரும் ஒன்று சேராவிட்டால் நாடு மீண்டும் பிளவுபட்டுவிடும்!

### அத்துரலிய தேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றாக சேர்ந்து இயங்கக் கூடிய காலம் ஏற்பட்டுள்ளது. அப்படி இயங்காவிட்டால் நாட்டு மீண்டும் இரண்டாகப் பிளவுபடக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஜாதிக ஹெல உறுமய வின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் போராட்டத்தால் வெல்ல முடியாத ஈழத்தை அரசியல் பலத்தால் வெல்ல தமிழ்த் தேசியக்கூட்டமைப்புமுயற்சிக்கிறது. ஆனால் அது முடியாத காரியமாகும் என அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். நாட்டுக்கு சேவை செய்ய பிக்குகளின் பலம் அவசியம் எனவும் இதன்போது அத்துரலிய ரத்தின தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## வன்னியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து ஆசிரியர்களுக்கான விசேட போக்குவரத்துக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


வடமாகாண ஆளுநர் வழிநடத்தலில் வடமாகாண சபை பேருந்துக்கள் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து இச்சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.

இப் போக்குவரத்து சேவையினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, மன்னார் ஆகிய வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளது.

வன்னிப்பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண ஆளுநரிடம் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து ஆசிரியர்களுக்கான (19ஆம் பக்கம் பார்க்க)

# வழிபாட்டுத் தலங்களை அழிக்க படைப்பிரிவு ஒன்று உள்ளதா?

## அரியம் எம்.பி கேள்வி



தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங் களைத் திட்டமிட்ட முறையில் அழிப்பதையே நோக்கமாக கொண்டுள்ள அதேநேரம் சர்வதேசத்திற்கு நல்லிணக்கம் என்ற வார்த் தையை கூறும் மகிந்த அரசுடன் இணக்கப் பாடோ, புரிந்துணர்வோ ஏற்படுவதில் சிக் கல் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இதைப் பார்க்கும்போது படையினர் மக்களைப் பாதுகாக்கின்றார்களா அல்லது தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களை அழி க்கவென்று ஒரு படைப்பிரிவு உள்ளதா எனச் சந்தேகம் தோன்றுகின்றது.

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் மகிழடித்தீவு கண்ணகியம்மன் ஆலய உற்சவ இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித் தவை வருமாறு:

யுத்தம் முடிபுற்று மூன்று வருடங்கள் கடந்த நிலையில் எமது இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதும், தமிழர்களின் கலை பாரம்பரியங்களை மாற்றுவதும், வரலாறு களைத் திரிபுபடுத்தி பொய்த் தகவல்களைக் கூறுவதும் தமிழர்களின் பூர்வீகமான வடக்கு, கிழக்கை திட்டமிட்டு அபகரிப்பதற்கான முயற் சிகளுமே இடம்பெற்று வருகின்றன. அண்மை யில் எல்லாவல மேதானந்த தேரர் ஒரு கருத் துக் கூறியிருக்கின்றார்.

அதாவது, திருகோணமலை கோணேஸ் வரர் ஆலயம் ஆரம்பத்தில் புத்தர் விகாரை இருந்த இடத்தில் கட்டப்பட்டது எனவும், விகாரை பின்னர் இடிக்கப்பட்டது எனவும் கூறியிருக் கின்றமை அவர் மகாவம்சத்தில் ஆலயம் பற்றி இருப்பதை அறிந்து கொள்ளாமல் புதிய வரலாற்றைக் கூறுவதுடன் மதகுருவுக்குப் பொருத்தமானர் அல்லர் என்பதும் தெளிவா கின்றது.

அதேவேளை, தம்புள்ள பள்ளிவாசலை அகற்றுவதற்கு எடுத்த நடவடிக்கைக்குப் பின்னர் மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு அருகில் இருக்கின்ற முத் தையா முனிவர் தவம் செய்த இடம் (குந்தவேல் மலை) சேதமாக்கப்பட்டது.

அத்துடன் பட்டப்பகலில் அதன் தூண்கள் அபகரிக்கப்பட்டன எனவும் இதனைப் படை யினர் செய்தனர் எனவும் என்னிடம் மக்கள் முறையிட்டதையும் தொடர்ந்து அவ்விடத்தை நான் நேரடியாகப் பார்வையிட்டபோது படை யினர் அணியும் மேல் அங்கி, சப்பாத்து ஆகி யவையும் இருந்தமையை என்னால் அவ தானிக்க முடிந்தது.

இதைப் பார்க்கும்போது படையினர் மக்களைப் பாதுகாக்கிறார்களா? அல்லது தமி ழர்களின் வழிபாட்டுத் தலங்களை அழிக்க வென்று ஒரு படைப்பிரிவு உள்ளதா? எனச் சந்தேகம் தோன்றுகின்றது. எனவே வடக்கு, கிழக்கில் வாழுகின்ற அனைத்து தமிழர் களும் ஒற்றுமையுடன் எமது இனத்தையும், நிலத்தையும் பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் காப்பாற்றக்கூடிய சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணிதிரள வேண் டும் என அரியநேத்திரன் தனதுரையில் தெரி வித்தார். (எ-11)

## புதிய வைரஸ் தாக்குதல்

பன்றிக் காய்ச்சல் என பரவலாக அறியப் படும் எச்1என்1 ஐ ஒத்த வைரஸ் தாக்குதல் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் அங்கொடையில் அமைந் துள்ள உள ஆரோக்கிய நிறுவகத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச் சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

மேற்படி உயிரிழந்தவர் குறித்த வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில், மூச்சடைப் பின் காரணமாக உயிரிழந்துள்ளார் என சுகாதார அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## சித்திர பாட முகாம்

யாழ். கல்வி வலயத்தினால் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர் களுக்கான சித்திர பாட முகாம் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை யாழ். வலயக் கல்வி அலுவலகத் தில் நடைபெறவுள்ளது. எனவே யாழ் வலயத் துக்குட்பட்ட சித்திர பாட மாணவர்கள் இதில் பங்கு பற்றி பயன் பெறுமாறு யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (எ)

## மோ.சைக்கிள் திருடர்கள் மாட்டிக்கொண்டனர்

(மிருசுவில்)

மோட்டார்சைக்கிள்திருட்டு முயற்சி இளைஞர் களின் சாதுரியத்தால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் மேற்குறித்த ஆலயத்தில் கலைநிகழ்வு இடம்பெற்றவேளை அதை சாதகமாக பயன்படுத்தி தரிப்பிடத்தில் நின்ற மோட்டார் சைக்கிளை மூன்று இளைஞர்கள் கள்ளச்சாவி ஊடாக திறக்க முற்பட்டவேளை அருகில் நின்ற இளைஞர்கள் அவ்விடத்திற்கு வந்தபோது குறித்த இளைஞர்கள் அருகில் இரு ந்த வயற் காணிக்குள் தப்பி ஓடியுள்ளனர்.

அதைத் தொடர்ந்து அங்கு நின்ற இரா ணுவத்தின் உதவியுடன் அவர்களில் இரு நபர்கள் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டபின் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-3;85)




## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூ ரியில் வருடாந்தம் நடைபெறும் நினைவுப் பேருரை வரிசையில் இவ்வாண்டு முதலா வது நினைவுப் பேருரையாக மகாவித்து வான் பிரம்மஸ்ரீ நா.வீரமணி ஐயரின் நினை வாக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தா. சனாதனன் ஓவியரினால் அழகியற் கல்வி-பாடசாலை மட்டத்தில் அதன் இலட்சியங்களும் எல்லைகளும் எனும் பொருளில் உரையாற் றவுள்ளார்.

இந்நிகழ்வு யாழ். தேசிய கல்வியியற் கல் லூரி கலையரங்கில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே. யோக நாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் என பீடாதிபதி அறிவித்துள்ளார். (எ)

## கணனி உதிரிப்பாகங்கள் திருட்டு

## சந்தேகத்தின் பேரில் மாணவன் உட்பட இருவர் கைது

(மல்லாவி)

திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் இடம்பெற்ற கணனி உதிரிப்பாக திருட்டோடு சம்பந்தபப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை மல்லாவிப் பொலிஸார் நேற்று கைது செய் தனர்.

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் கடந்த சனி, ஞாயிறு பாடசாலை விடுமுறை தினங்களில் பாடசாலை கணனி அறையினை உடைத்து ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதி யான கணணிகள் திருடப்பட்டிருந்தன.

இச் சம்பவத்தோடு தொடர்புடைய அப் பாடசாலை மாணவன் ஒருவனும் இளைஞன் ஒருவனும் நேற்று மல்லாவி பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டனர்.

கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தும் ஏ9 வீதியில் இரணைமடுவில் அமைந்துள்ள தனி யார் எரிபொருள் நிலையத்திலும், தனியார் வீடு ஒன்றிலும் இருந்து நேற்று மதியம் 12.30 மணியளவில் மீட்கப்பட்டது. (எ-11-15)

## விலைக் கேள்விக்கான கோருதல்

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

என்னால் 2012.06.02ந் திகதிய பத்திரிகையில் "விலைக் கேள்விக்கான கோருதல்" என்னும் தலைப்பில் வெளியான விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் செய்யப் படுகின்றன.

**பந்தி 6 விலைக் கேள்வி ஆவணம் வழங்கப்படும் கடைசித் திகதி 25.06.2012 பிற்பகல் 15.00 மணிவரை.**

தி. பிரகாஸ்
தவிசாளர்,
வலி. தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(C-186)

## மரண அறிவித்தல்

## அப்புத்துரை தற்பரானந்தன்

**(ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும் சமாதான நீதிவானும்)**



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும், வட இலங்கை சங்கீத சபையின் செயலாளரும், சைவ வித்தியா விருத்திச் சங்க முன்னாள் தலைவரும், கந்த ரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் ஸ்தாபகரின் பேரனும், சமூக சேவையாளருமான அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் 05.06.2012 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலாம்பிகாதேவியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான அப்புத்துரை-சேதுநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சோதிநாகரத்தினம் மாமாங்கம் தம்பதியினரின் மருமகனும், நித்தியானந்தன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), சர்வானந்தன் (சீமெந்து கூட்டுத்தாபனம்), குலகுணேஸ்வரி, குலகுணராணி, குலகுணசக்தி, காலஞ்சென்ற தேவானந்தன் (பொறியியலா ளர்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சண் கந்தையா (ஓய்வுபெற்ற நூலகர்) மற்றும் செல்வக்குமாரன் (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற தில்லைநடராஜா (நில அளவையாளர்) மற்றும் வடிவாம்பிகை, செல்வராணி, ஹேமாங்கினி, சித்திரா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பொன்னம் பலம் (ஓய்வுபெற்ற பதிவாளர்) அவர்களின் சகலனும் ஆவார்.

நிகேதினி (ஆசிரியை), சிவமயூரன் (கொமர்சல் bank ), சிவகரன், சிவ ஜீவன், சிந்துஜா, அர்ச்சுதன் ஆகியோரின் பெரியப்பாவும் கேதாரணி (U.S.A), பவதாரணி(U.K), குமரன்(Canada), குமுதினி(ஆசிரியை), ஜபா லினி(Canada), துவாரகன், கஜானன், மைதினி, மாதினி, சாம்பவி, சர்வகா, விஸ்வநாதன், பிரணவன், ஜயசீலன், சிவரூபன் ஆகியோரின் மாமனாரும் அட்சயா, அகரன், யோகிதா, வனயா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (09.06.2012) அன்று 9.30 மணிக்கு ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து கந்தரோடை சங்கம்புலவு மயானத்தில் அந்தியெட்டி கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஆனந்தகம்"
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்:
தற்பரானந்தன் நகுலாம்பிகாதேவி
(மனைவி)

(8596)

2-6 Months **Diploma**

MS Office, DTP, Web Design, Hardware, Networking, Accounting, Autocad-2D & 3D, Multimedia

Course fee free (DTP, Web Design)

மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் நேரில்

Qualified Lectures panel, 12 Years Experience

கல்வியங்காட்டில்

MCAI CAMPUS

Supported by Jaffna Computer Society

SMS Your name & Course to 775520940 & Get Schol.

243, Adiyapatham Road

Bus Route 750 / 751

# இன்று ஒரு தகவல்

## பீமன் கேட்ட கேள்வி

பஞ்ச பாண்டவர்களில் மூத்தவர் தர்மபுத்திரர்.

ஒருநாள் பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம் வந்து பிச்சை கேட்டான்.

அந்தச் சமயத்தில் தர்மர் ஏதோ ஒரு வேலையாக இருந்தார்.

அதனால் அவர் "நாளைக்கு வா!" என்று கூறி அவனை அனுப்பி வைத்தார்.

அவனும் "சரி" என்று சொல்லி விட்டுச் சென்றான். அந்தக் காட்சியை சற்று தூரத்திலிருந்த பீமன் பார்த்துக் கொண்டிருந்தான்.

உடனே அவன் என்ன செய்தான் தெரியுமா?

ஒரு முரசை எடுத்துக்கொண்டு ஊர் மக்களை நோக்கி ஓடினான்.

முரசை அடித்துக் கொண்டே ஏதோ சொல்ல ஆரம்பித்தான். இந்த விபரம் தர்மருக்கும் தெரியவந்தது.

அவர் பீமனை அழைத்து, "உனக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டார்.

அதற்கு பீமன், "நான் எல்லோரிடமும் சென்று 'என் அண்ணன் காலத்தை வென்று விட்டார்!' என்று சொல்லப் போகிறேன்" என்றான்.

"ஏன் அப்படி சொல்லப் போகிறாய்?" என்று கேட்டார் தர்மர்.

அதற்கு பீமன், "நீங்கள் பிச்சைக்காரனை நாளைக்கு வரச் சொன்னீர்களே... நீங்கள் நிச்சயமாக நாளைக்கு உயிரோடு இருப்பீர்களா? அந்தப் பிச்சைக்காரனும் நாளைக்கு நிச்சயமாக உயிரோடு இருப்பானா?

ஒருவேளை நாளைக்கு நீங்கள் உயிரோடு இருந்தாலும் பிச்சையிடும் மனநிலை உங்களுக்கு இருக்குமா? நிச்சயமாகப் பிச்சை போடுவீர்களா? நாளை வரையில் அவன் பிச்சைக்காரனாகவே இருப்பான் என்பது நிச்சயமா? நாளைக்கு உங்கள் இருவரின் சந்திப்பு நிச்சயம் நடக்குமா?

நீங்கள் காலத்தை வென்று விட்டீர்களா... அதனால்தான் அவ்வளவு நிச்சயமாகப் பிச்சைக்காரனை நாளைக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள்! இது எவ்வளவு பெரிய விடயம்?

எனக்கு நேரமாகிவிட்டது. நான் ஊரிலிருப்பவர்களிடமெல்லாம் சென்று இதைச் சொல்ல வேண்டும். தாமதிக்க முடியாது.

ஏனென்றால்... இந்த நேரம் போய்விட்டால் அடுத்த நாழிகை எனக்குக் கிடைக்கும் என்பது நிச்சயமில்லை" என்றான் பீமன்.

உடனே தர்மர் "தம்பி பீமா! சற்று பொறு... நான் தவறு செய்துவிட்டேன். நான் பிச்சைக்காரனிடம் கூறியது போல் பரிபூரண சுதந்திரம் பெற்ற மனிதன் தான் பேச முடியும். அப்படி வாக்குறுதி தரமுடியும்.

அந்தப் பிச்சைக்காரனை உடனே இப்போதே கூப்பிடு. ஏதாவது உடனே கொடுத்து அனுப்பி வைக்கிறேன். நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்?" என்றார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்; நிகழ்காலம் ஒன்றுதான் நம் கையிலிருக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்த வேண்டியது நம் பொறுப்பு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசாங்கத்தின் அராஜகங்களை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்த ஏற்பாடு

## த.தே.கூட்டமைப்பு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை அரசாங்கத்தினால் தமிழர்கள் வாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அராஜகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் அனைத்து கட்சிகளின் பங்களிப்புடன் உண்ணாவிரதப்போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கில் காணி அபகரிப்பு நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மிகவும் துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றது.

தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்த காணிகளை இராணுவத்தினர் ஊடாக அபகரித்து தமிழர்களின் குடிப்பரம்பலை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

மீள்குடியேறுவதற்காக பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் காத்திருக்கின்ற நிலையில் அவர்களுக்கு சொந்தமான காணிகளை இவ்வாறு அபகரிக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் பலரும் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டும் அதற்கு எந்தவித நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

அத்தோடு தமிழர்களின் கோரிக்கைகளை நிரந்தர அரசியல் தீர்வு இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுவதில் எந்தவித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதும் அந்த நிலங்களில் புத்தர் சிலைகளையும் புத்த விகாரைகளையும் அமைத்து இந்து மக்களின் மனங்களை நோகடித்து வரும் இந்த அரசாங்கத்தின் அராஜகத்தை சர்வதேச சமுகத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் இம்மாத இறுதிக்குள் முறிகண்டிப் பகுதியில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுவது என முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இம் முடிபு அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா ஆகியோரினால் எடுக்கப்பட்டுள்ளதோடு இந்த அடையாள உண்ணாவிரத போராட்டத்திற்கு அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (அ-6)

# திருக்குளிர்த்தி பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு தில்லை வெளி அருள்மிகு ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் விழா கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை கும்பஸ்தானத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை வேள்வித் திருக்குளிர்த்திப் பொங்கல் நடைபெற்று இரவு 8 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் திருவூஞ்சல் சுவாமி எழுந்தருளலும் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 | 110 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 70 | 100 |
| தக்காளி | 130 | 160 | 140 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 35 |
| கோவா | 60 | 60 | 60 | 70 |
| கரட் | 100 | 90 | 100 | 120 |
| பூசணி | 25 | 30 | 30 | 30 |
| புடோல் | 60 | 40 | 50 | 70 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 100-150 | 120 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 150 | 150 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 90 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 | 90 |
| பயற்றங்காய் | 50 | 80 | 130 | 50 |
| லீக்ஸ் | 150 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 80 | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 300 | 140 |
| போஞ்சி | -- | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | -- | -- |
| கீரை - 1 பிடி | 5-10 | 10 | 20 | 10 |
| தேசிக்காய் | 140 | 80 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 20 | 16-20 |

# இராசி பலன்

08.06.2012
(வைகாசி 26, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 10.02 மணிவரை
உத்தராடம் முற்பகல் 7.08 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை

**மேடம்** சிறந்த எதிர்காலத்திற்கு வழி சமைத்துக் கொள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வழிபாட்டால் சிறப்புக்கள் வந்து சேரும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, முன்னோர் சொத்துக்களிலிருந்து ஆதாயம் கிடைக்கலாம்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அதிகம் செலவாகாதிருக்க விழிப்புணர்வு தேவை, பேச்சில் நிதானம் தேவை, ஆரோக்கியத்தில் சற்று தளர்வு ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி நிம்மதியைக் கொடுக்கும், கௌரவமான நாள்.

**சிங்கம்** இஷ்ட தெய்வ வழிபாட்டால் செல்வம் வந்து சேரும் நாள், கனிவான தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கடன்கள் தொடர்பான பிரச்சினைக்கு புதிய வழியைக் கையாள்வீர்கள், தேக நலன் சீராகும்.

**கன்னி** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகள் தொடர்பான செலவுகளை குறைக்கும் எண்ணம் மேலோங்கும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**துலாம்** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய் வழி ஆதரவு பெருகும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், சுவாரஸ்யமான நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு** இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உடல் நலம் சீராகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், மனச்சஞ்சலங்கள் கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மீனம்** கூட்டு முயற்சி வெற்றியளிக்கும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பிறரது பாராட்டுக்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

வளவன்

# உயிர் மீண்ட காளை மாடு 21

## காளைமாட்டு வழக்கைப் பார்க்க நீதிமன்றில் கூடிய மக்கள்

வலம்புரி ஆசிரியர் தலையங்கத்தைத் தொடர்ந்து காளைமாட்டைப் பொறுப்பேற்பது என்ற முடிபில் வணிகர் கழகம் உறுதியாக இருந்தது.

இதற்குத் தேவையான நிதியைத் திரட்டுவதில் வணிகர் கழகத்தின் செயலாளர் ஜனக்குமார், சீமாட்டி உரிமையாளர் த.சற்குணராஜா, க.கு.சிவபாலன் ஆகியோரின் பணியை ஒருபோதும் மறந்துவிட முடியாது.

காளைமாட்டைக் கொள்வனவு செய்வதற்கு ஒரு வழி செய்யுங்கள் என்ற கோரிக்கையை யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவர் சீமாட்டி த. சற்குணராஜா அவர்களிடம் தொலைபேசி மூலம் முன்வைக்கப்பட்டது.

காளைமாட்டை வாங்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தவர். அவர் அளித்த ஒத்துழைப்பு காளைமாடு உயிர் பிழைப்பதில் பெரும் பங்காற்றியது.

இவரோடு யாழ்ப்பாண வணிகர் கழக செயலாளர் இ.ஜனக்குமாரும், அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார் க.கு.சிவபாலனும் காளைமாட்டைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைத் திரட்டுவதில் முன்னின்றுழைத்தனர்.

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தின் பிரகாரம் காளைமாட்டை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் பராமரிக்கலாம் என்ற முன்மொழிவை அமுல்படுத்துவதில் நூறு வீதமான பங்களிப்பை வழங்கியவர் க.கு.சிவபாலன் என்பது மறுக்க முடியாத உண்மை.


இவ்வாறாகக் காளைமாட்டை மீள் கொள்வனவு செய்வதற்கான நிதியை யாழ்ப்பாண வணிகர் கழகம் செலுத்தும் எனவும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் அந்தக் காளை மாட்டைப் பராமரிக்கும் என்ற முடிபும் எடுக்கப்பட்ட பின்னர் அந்தத் தகவல் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

காளைமாட்டு வழக்கு 30.03.2012 அன்று நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் பிரதிநிதியான கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் ஆஜராகியிருந்தார்.

எனினும் அவருக்காக சட்டத்தரணிகள் எவரும் பிரசன்னமாகியிருக்கவில்லை.

எதிர்த் தரப்பில் காளை மாட்டை ஏலத்தில் கொள்வனவு செய்தவருக்காக சிரேஷ்ட சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் பிரசன்னமாகியிருந்தார்.

கூடவே, காளைமாட்டைக் கொள்வனவு செய்தவரின் உறவு



களும் நீதிமன்றில் இருந்தமையால் அன்றைய நாள் நீதிமன்ற வளாகத்தில் சனக்கூட்டம் அதிகமாகவே இருந்தது.

30.03.2012 இல் நடந்த வழக்கின்போது முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் இங்கு ஏற்கெனவே தரப்பட்டிருந்தாலும் வழக்கு விசாரணையின் போது நடந்த கருத்துப் பரிமாறல்களை ஒரு கணம் மீட்டுப்பார்ப்பது உகந்ததாகும்.

30.03.2012 அன்று காளை மாடு தொடர்பான முதலாவது வழக்கு விசாரணை நீதிபதி எம்.கணேசராஜா தலைமையில் இடம்பெற்ற போது, காளைமாட்டை இறைச் சிக்காக வெட்டும் பொருட்டு அதனைக் காட்சிப்படுத்தியமை மற்றும் விளம்பரத் துண்டுப்பிரசுரம் வெளியிட்டமை, இந்து மக்களின் மனங்களைப் புண்படுத்தியதாக நீதிமன்றில் யாழ்.அரச அதிபரின் பிரதிநிதி எஸ். உதயபாலன் தெரிவித்தார்.

இதனை மறுத்த சட்டத்தரணி, அதிக நிறையுடைய காளைமாட்டின் இறைச்சியை விற்பனை செய்வதாக இருந்தால் அதற்கான விளம்பரம் தேவைப்படும் என்று வாதிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் அரச அதிபரின் பிரதிநிதி, முஸ்லிம் மக்களுக்குப் பன்றி கறாம். யாழ்ப்பாண நகரில் யாரேனும் பன்றி ஒன்றைக் காட்சிப்படுத்தி, அதன் இறைச்சி விற்பனை செய்யப்படும் என்று துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தால், அந்நிகழ்வு முஸ்லிம் மக்களை மனவருத்தத்திற்கு உட்படுத்தும். அதுபோலத்தான் இந்துக்களின் வழிபாட்டிற்குரிய காளைமாட்டைக் காட்சிப்படுத்தி அதன் இறைச்சி விற்பனையாகும் எனத் துண்டுப்பிரசுரம் வெளியிட்டமை இந்து மக்களின் மனங்களைப் புண்படுத்தியது என்றார்.

இவ்வாறாக அன்றைய வழக்கு இடம்பெற்று 16.04.2012 இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

16ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2012 அன்று காளை மாட்டு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காளை மாட்டைக் காப்பாற்றும் தரப்பில் ஒய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா ஆஜராகியிருந்தார்.

யாழ். அரச அதிபரின் பிரதிநிதியாக மன்றில் தோன்றிய கலாசார உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் தனது தரப்பிற்கு சட்டத்தரணி ஒருவர் தேவை என்ற அடிப்படையில் ஓய்வு பெற்ற நீதிபதி விக்னராஜாவைச சந்தித்து உதவுமாறு கேட்டுக் கொள்ள எந்தவிதமான பிரதியுபகாரமும் இல்லாமல் காளை மாட்டைக்காப்பாற்ற நான் வருகிறேன் என்றார் விக்னராஜா அவர்கள்.

16.04.2012 இல் நடந்த காளை மாட்டு வழக்கில் எதிர்த் தரப்பின் சார்பில் ஜொனி மதுரநாயகம் மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த நுஃமான் ஆகியோர் ஆஜராகி இருக்க வழக்காளி சார்பில் ஓய்வுபெற்ற நீதிபதி இ.த.விக்னராஜா ஆஜராகியிருந்தார்.

நீதிமன்றில் இளமைக்கும் முதுமைக்குமான ஒரு களமாக வும் காளை மாட்டு வழக்கு அமைந்திருந்தது என்பதை இவ் விடத்தில் குறித்துக் காட்டுவது பொருத்தமுடையதே.

விதுரன்

(திங்கள் வளரும்)

# லண்டன் மாநகரில் மக்கள் திரண்டனர்; ஜனாதிபதி மஹிந்த வெளியேறினார்

## நன்றி தெரிவிக்கின்றது தமிழர் பேரவை

(லண்டன்)

**லண்டன் மாநகரின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் அலை யென திரண்டு மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொண்ட தொடர் ஆர்ப்பாட்டம் பாரிய அவமானத்தையும் பெரும் தலை குனிவையும் ஏற்படுத்திய நிலையில் பிரித்தானியாவை விட்டு அவர் வெளியேறி இருக்கிறார் என பிரித்தானிய தமிழர் பேரவை தெரி வித்துள்ளது.**

மேலும் தமிழர் பேரவை தெரிவித்தவை வருமாறு,

மஹிந்த ராஜபக்ஷ லண்டன் ஹோட்டலில் இருந்து விமான நிலையத்தை நோக்கி மாலை 5.30 மணியளவில் புறப்பட்ட போது அங்கு பெரும் சனத் திரளாக திரண்டிருந்த தமிழ் மக்கள் முட்டைகளையும் பாதணிகளையும் அவரது வாகனத்தின் மீது வீசியும் கோசங்களை எழுப்பியும் தமது ஆத்திர உணர்வை வெளிப்படுத்தினர்.

மாநாட்டில் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றுவதற்கு இருந்த உரை இரத்து செய்யப்பட்டிருந்த போதிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மாநாடு நடைபெறும் மான்சன் ஹவுஸ் முன்பாக சன சமுத்திரமாக நிறைந்து நின்று திரண்டு ஆர்ப்பாட்டதை தொடங்கினர்.

தமிழ் மக்களின் இந்த பாரிய ஆர்ப்பாட்டத்தை கண்டு கொண்டே மகாராணி மால்பரோ ஹவுசினுள் மதிய உணவு விருந்திற்காக உள்நுழைந்து சென்றதுடன் பின்னர் அங்கு ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். பல்லாயிரக்கணக்கான தமிழ் உணர்வாளர்களால் இந்த மால்பரோ ஹவுசின் முன்பாக ராஜபக்ஷவின் கொடும்பாவி ஒன்றும் இலங்கையின் தேசிய கொடியும் எரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்கு முறைகளை கண்டிக்கும் நூற்றுக்கணக் கான பதாதைகள் மற்றும் சுலோக அட்டை களை தாங்கியும் கோசங்களை எழுப்பியும் காலை 8 மணி முதல் தமிழ் மக்கள் மேற் கொண்ட ஆர்ப்பாட்டம் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த உலக தலைவர்கள், இரா ஜதந்திரிகள் மற்றும் பிரதானிகளின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் பல வெளிநாட்டு ஊட கங்களின் கவனத்தையும் பெற்றிருந்தது. ஐரோப்பாவின் பல நாடுகளில் இருந்தும் பிரித்தானியாவின் பல்வேறு பாகங்களில் இருந்தும் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துள்ளனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)


## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



பதின்னான்காம் திருவிழா (08.06.2012)

### கந்தன் பாதார விந்தங்களை என்றும் பணியுங்கள்



இணுவைக்கு வாருங்கள் இளங் குமரனைப் பாருங்கள்
இன்பமாய் வீற்றிருந்து அருள் புரிவதைக் காணுங்கள்
கருணைகொண்ட கந்தன் திருப்புகழைப் பாடுங்கள்
கல்லையும் கனியவைக்கும் திருக்கோலம் காணுங்கள்
கருணைக் கடலாம் உமைபாலனை என்றும் நாடுங்கள்
குறைகளைக் கூறுங்கள் குற்றம் களைவான் நம்புங்கள்
நொச்சியம்பதியான் வரலாற்றைக் கேட்டு மகிழுங்கள்
அவன் பாதார விந்தங்களை என்றும் பணியுங்கள்



சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர்) நாயன்மார்கட்டு

14ஆம் திருவிழா உபயகாரர்

(சி-081)


# தெரிவுக்குழுவின் ஊடாக ஆறுமாதங்களில் இனப்பிரச்சினைக்கு இணக்கப்பாடு எட்டப்படும்

## பயம் வேண்டாம் என்றார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் தயக்கம் காட்டி வருகின்றது என தங்களுக்குப் புரியவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது குறித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் எதிர்கால நிலைமைகள் குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசாங்கத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இன்னும் அதில் இணைந்து கொள்ளாமல் உள்ளன.

இதனால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாத நிலைமைகளே உள்ளன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து செயற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இன்னும் தயக்கம் காட்டி வருகின்றது என எமக்குப் புரியவில்லை.

அதாவது நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக ஆறு மாதங்களில் தீர்வு தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என பிரேரனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்விதமான தயக்கமும் இன்றி தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ள முடியும்.

ஒருவேளை ஆறுமாத காலத்தில் தீர்வு வராவிடின் அரசாங்கத்துக்கே சாதகமற்ற நிலைமை ஏற்படும். அத்துடன் அந்த நேரத்தில் தமிழ்க் கூட்டமைப்பு தனது நியாயத்தை விளக்கலாம். இதனை புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ள முன்வர வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக 60 வருடகாலம் பொறுத்திருந்த இவர்களால் 6 மாதங்கள் நாடாளுமன்ற தெரிவு க்குழுவில் இணைந்து செயற்பட முடியாதா? என்பதே எமது முன்னுள்ள கேள்வியாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

## மிருசுவில் வடக்கில் மதுபான விற்பனை

(மிருசுவில்)

மிருவில் வடக்கு போக்கட்டி பகுதிகளில் உள்ள வீடுகளில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு வீடுகளில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதனால் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை இம் மதுபானத்தை இலகுவாக பெற்று அருந்துகின்றனர். இதனால் இப்பகுதிச் சமூகம் சீரழிந்து செல்கின்றது. இது தொடர்பாக பலமுறை செய்திகள் வெளியிடப்பட்டும் எதுவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-85)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

23

May 2012 to October 2012

### தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அநுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2012 (28.03.2012)

(சி/181)

உலகப் பெருமஞ்சம் என வர்ணிக்கப்படும் இணுவில் கந்தசுவாமி ஆலய மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

(படம்:- அலுவகைச் செய்தியாளர்)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கர்ப்பிணித்தாய்மாரின் இறப்புவீதம் அதிகரிப்பு

## புள்ளி விபரத்தில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு வீதம் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் இறப்புக்களுக்கு கர்ப்பிணித் தாய்மார்களுக்குரிய விழிப்புணர்வுகள் வழங்கப்படாமையும் சிகிச்சையில் ஏற்படும் தாமதமுமே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில இறப்புக்கள் தாய்மார்களின் கவனயீனத்தினாலும் ஏற்படுகின்றது. கடந்த மாதத்திலிருந்து இன்று மட்டும் 5 கர்ப்பிணித் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர்.

இதனைவிட சட்டவிரோத கருக்கலைப்பினாலும் 3 தாய்மார்கள் உயிரிழந்துள்ளதோடு இவர்களில் ஒருவர் திருமணமாகாதவராகவும் மற்றொருவர் கணவன் வெளிநாட்டில் உள்ள நிலையில் முறையற்ற விதத்தில் கர்ப்பம் தரித்தவராகவும் காணப்படுகின்றார்.

சில சுந்தர்ப்பங்களில் சிசுக்கள் காப்பாற்றப்படுகின்றன. ஆயினும் சில வேளைகளில் சிசுக்களுடன் தாயாரின் உயிரும் பிரிய நேரிடுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தாய்மார்களின் இறப்பு குறைவாகக் காணப்படுகின்ற போதும் சட்ட விரோத கருக்கலைப்புக்களின் போது அதிக இரத்தப்போக்குடன் மரணத்தின் தறுவாயில் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களினால் அவர்களினை காப்பாற்ற முடியாத நிலையேற்படுகின்றது. இவ்வாறான நிலைகளுக்கு குறித்த தாய்மார்களிடம் விழிப்புணர்வற்ற தன்மையே காரணமாகும்.

உரியவர்கள் இவ்வாறான தாய்மார்களுக்குரிய ஆரம்ப நிலை அறிவூட்டல்கள் கட்டம் கட்டமான சிகிச்சை முறைகளுக்கு செல்ல வேண்டியதன் அவசியத்தை தாய்மார்களுக்கு வலியுறுத்தாமை, உடல் நிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்ற போது வைத்தியசாலைக்கு செல்வதில் ஏற்படுகின்ற தாமதம் போன்றவற்றினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து போதியளவு அறிவூட்டல் வழங்கப்படாமையே இந்நிலை ஏற்படக் காரணமாகும்.

சிசுக்கள் உரிய முறையில் வளர்ச்சியடைந்துள்ள போதும் சில மருத்துவ சிகிச்சை முறைகளில் ஏற்படும் தாமதம், அவசரம் என்பவை காரணமாகவும் இறப்புக்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் நிகழ்ந்துள்ளன.

அண்மையில் பெண்ணொருவர் 36 கிழமைகள் கர்ப்பிணித்தாயாக இருந்து யாழ். போதனா வைத்தியசாலையிலும் பிரதேச வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு இரத்த அழுத்தம் உயர்வாக காணப்பட்ட போது வைத்தியரினால் சிகிச்சை மேற்கொள்ளப்படாமையால் உயிரிழந்துள்ளார்.

இதைவிட சுன்னாகம் பகுதியில் அண்மையில் குடும்பப் பெண்ணொருவர் உறவினர் வீட்டுக்குச் சென்றதன் காரணமாக சிகிச்சைக்கு உரிய திகதியில் செல்லாமல் 3 நாட்கள் கடந்த நிலையில் சென்றுள்ளார்.

இதனால் குறித்த தாயின் நிலை மிக மோசமாக இருந்ததால் அவர் உயிரிழக்க நேர்ந்துள்ளது.

விழிப்புணர்வுகள், ஆலோசனைகள் உரியவர்களினை சென்றடையாவிட்டால் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு அதிகரித்துக்கொண்டு செல்வதை தடுக்க முடியாது என யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் முறையற்ற விதத்தில் கருத்தரிப்போரும் அதனைக் கலைப்பதற்காக சட்டவிரோத கருக்கலைப்பை நாடுபவர்களுக்கும் அதனால் ஏற்படக்கூடிய அபாயத் தன்மையை விளக்கப்படுத்த வேண்டும் எனவும் சட்ட விரோத கருக்கலைப்பிடங்கள் பொலிஸாரினால் இனங்காணப்படல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-4)

# ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய வகையில் வாகனங்களைச் செலுத்த வேண்டாம்

## பொலிஸார் அறிவுறுத்து

(கரவெட்டி)

வடமராட்சி வல்லைவெளி பகுதியால் பயணிப்போர் மற்றையவர்களுக்கு ஆபத்தை விளைவிக்காத வகையில் வாகனத்தைச் செலுத்துமாறு நெல்லியடி பொலிஸாரால் எச்சரிக்கைப் பலகையொன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறையூடாக யாழ். செல்லும் பிரதான வீதி அகலமாக்கப்பட்ட பின்னரும் விபத்துச் சம்பவங்களால் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இதில் மூத்தவிநாயகர் கோவிலில் இருந்து வல்லைச் சந்திக்கு இடைப்பட்ட வீதியில் அண்மைக்காலமாக ஐந்திற்கும் மேற்பட்டோர் கோர விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இதனை அடுத்து காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு 3 உப பொலிஸ் அத்தியட்சகர் யசிந்த கமகே வழிகாட்டலின் கீழ் நெல்லியடி பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி நிஷந்த தலைமையில் நேற்று முன்தினம் இவ்வாபத்து எச்சரிக்கைப் பலகை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் அப்பிரதேச வீதியில் வாகனத்தை மெதுவாக செலுத்துமாறும் அவதானமாக போக்குவரத்தை மேற்கொள்ளுமாறு பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (அ-3-24)

# பிரேத அறையின் கூலர் இயந்திரங்களின் இயக்கம் ஸ்தம்பிதம் அடைந்தது

## யாழ். போதனா வைத்தியசாலைக்குள் கால்வைப்போர் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ள கூலர் இயந்திரங்கள் ஒழுங்காக இயங்காமையினால் அப்பகுதி சுடுகாடு போல் துர்நாற்றம் வீசுகின்றது.

அண்மையில் இத் துர்நாற்றத்தினை குழாய் மூலம் வானத்தை நோக்கி விடப்பட்ட போதும் அது குறைந்தபாடில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பிரேத அறையில் பணியாற்றுவோரும் அப்பகுதியூடாக நோயாளர்களை பார்வையிடச் செல்வோரும் நோயாளர்களாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

பிரேத அறையில் பொருத்தப்பட்டுள்ள நான்கு கூலர் இயந்திரங்களும் சீராக இயங்காமையினால் உள்ளே காணப்படும் சடலங்களும் விரைவில் பழுதடைகின்றன.

இதனால் கொலையுண்ட சடலங்கள் மற்றும் சட்ட ஆதார உயிரிழப்புக்கள் என்பன பாதுகாக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

மேலும் முன்னரை விட தற்போது பிரேதங்கள் வைக்கும் அறையில் முன்னேற்றம் உள்ள போதும் அதனை மேலும் விருத்தி செய்யுமாறு பணியாளர்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (அ-2-4)

# மீள்குடியேற்றக் கிராமமான இத்தாவிலையும் கவனியுங்கள்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் மேற்குப் பகுதியான இத்தாவில் கிராமத்தில் 12 வருடங்களின் பின் தற்போது மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.

இதன்முதற்கட்ட நடவடிக்கையாக முருகன்கோவில் வீதிக்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள பகுதிகளில் மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டிற்கு உட்பட்ட காலப்பகுதிகளில் நடைபெற்ற மோதல்களினால் வீடுகள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் எனச் சகல கட்டடங்களும் தரை மட்டமாகக் காட்சியளிக்கின்றன.

கிணறுகள் மூடப்பட்டும் இடிந்த நிலையிலும் காணப்படுகின்றது. தற்போது இப்பகுதிகளில் மக்கள் இரவு பகலாக பற்றைகளை வெட்டிக் காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றனர்.

இவ்வீதியால் செல்லும் பேருந்துகள் நிறுத்துவதற்குரிய பேருந்து தரிப்பிடங்கள் இன்மையால் பேருந்துகள் இப்பகுதியில் தரிக்காது செல்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே பேருந்து தரிப்பிடங்களை அமைத்து மக்கள் இலகுவாகப் பயணங்களை மேற்கொள்ள உதவுமாறும் ஏனைய தேவைகளையும் தமக்குரிய தரப்பினர் நிறைவேற்றித் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, மூடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், மருதனார்மட பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)





சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் முகாமைத்துவக் குழுவும் இணைந்து நடத்திய பாலர் பாடசாலையின் 47 ஆவது ஆண்டு விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் முன்பள்ளி சிறார் ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதனையும் சிறார்கள் சிறுவர் துஷ்பிரயோக சுலோகத்தினை தாங்கி நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சித்தங்கேணி செய்தியாளர்)

# பிரித்தானிய பிரதமர் கமரூனுடன் உரையாட ஏங்கித்தவித்த ஜனாதிபதி

(கொழும்பு)

பிரித்தானியமகாராணிக்குகொமன் வெல்த் செயலாளர் கமலேஸ் சர்மா நேற்று முன்தினம் வழங்கிய மதிய விருந்தின் போது எடுக்கப்பட்ட குழுப் படத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுடன் ஒட்டிக் கொண்டார்.

கொமன் வெல்த் தலைமையகமான மால்பரோ ஹவுசில் மகாராணிக்கு விருந்துபசாரம் அளிக்கப் பட்டது. இதில் 54 கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மற்றும் விருந்தினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக மால்பரோ ஹவுஸ் முன்பாக தமிழர்கள் முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

இந்த விருந்தில் பிரித்தானிய மகாராணிக்கு இடப்புறமாக கொமன் வெல்த் செயலர், கமலேஸ் சர்மாவின் மனைவி, நமீபிய ஜனாதிபதி, அவரது மனைவி, நியூசிலாந்துப் பிரதமர் மற்றும் அவரது மனைவி ஆகியோருடன் மஹிந்தவுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த விருந்தின் ஒரு கட்டமாக குழுப்படம் எடுக்கப்பட்டது.

அப்போது பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுக்கு அருகே சென்று நின்று கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ. அது முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருக்கவில்லை.

லண்டன் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட எந்தவொரு அரச பிரதிநிதியும் சந்திக்கவில்லை. முறைப்படியான சந்திப்பு இடம்பெறாவிட்டாலும் நடைபெற்ற விருந்துபசாரத்தில் டேவிட் கமரூனுடன் மஹிந்த ராஜபக்ஷ உரையாடலாம் என்று கருதப்பட்டது. ஆனாலும் அத்தகைய சந்திப்பும் கூட இடம்பெற்றதாக தகவல் இல்லை. (அ-2)

# அம்பாந்தோட்டையில் வாகன இறக்குமதி 50 ஆயிரம் ரூபா மேலதிக செலவு ஏற்படும்

## அனுரகுமார எம்.பி. தெரிவிப்பு

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதனால் மேலதிகமாக 50 ஆயிரம் ரூபா செலவாகின்றது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இத்துறைமுகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு இரண்டாண்டுகள் பூர்த்தியாகவுள்ளன. என்ன நேர்ந்துள்ளது. கப்பல்கள் வருவதில்லை. சரக்கு ஏற்றும் கப்பல்களை நங்கூரமிடாத துறைமுகத்தினால் என்ன பயன்? துறைமுகத்தில் பஸ் நிறுத்த முடியுமா? தற்போது ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்கு வரும் வாகன கப்பல்கள் அனைத்தும் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இந்தத் துறைமுகத்தின் நடவடிக்கைகளினால் வாகனங்களின் விலை 50 ஆயிரம் ரூபாவினால் உயர்வடையும் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்திலிருந்து அம்பாந்தோட்டைக்கு கப்பல்கள் அனுப்பி வைக்கப்படுவதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் ரோஹிந்த அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கப்பல் ஜப்பானிலிருந்து சிங்கப்பூர் வழியாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொன்சேகாவின் எம்.பி.பதவி யோசனை விலக்கப்பட்டது

(கொழும்பு)

ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தொடர்பாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவிருந்த உறுப்பினர் யோசனையை விலக்கி கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் கூடிய கட்சியின் நாடாளுமன்ற குழு கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவிற்கு அரசியல் சுதந்திரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் யோசனை ஒன்று முன்வைக்கப்படவிருந்தது. இந்த யோசனை தொடர்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த யோசனையை முன்வைக்க வேண்டாம் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல ஊடாக சரத் பொன்சேகா நாடாளுமன்ற குழுவிடம் கோரியிருந்தார்.

இதற்கமையவே அந்த யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படாது விலக்கிக் கொள்ளப்பட்டதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (8-11)




★ 1405-யோர்க் ஆயர் ரிச்சார்ட் ஸ்க்ரோப் நோர்ஃபோக், இரண்டாம் நிலை மன்னர் தொமஸ் மோபிறே ஆகியோர் மன்னர் இங்கிலாந்தின் நான்காம் ஹென்றியின் ஆணையின் பேரில் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1783-ஐஸ்லாந்தில் லாக்கி எரிமலை வெடிக்க ஆரம்பித்ததில் எட்டு மாதங்களில் வரட்சி மற்றும் வறுமை காரணமாக 9 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசி அமெரிக்கக் கூட்டில் இருந்து விலகியது.

★ 1887-ஹேர்மன் ஹொலரித் துளையிடும் அட்டை கொண்ட கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1929-ஐக்கிய இராச்சியத்தில் முதற் தடவையாக தொழிற்கட்சி ஆட்சி அமைத்தது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிரியா மற்றும் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தன.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி, நியூகாசில் நகரங்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தின.

★ 1984-அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஓரினச்சேர்க்கை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டது.

★ 1992-முதலாவது உலகக் கடல் நாள் கொண்டாடப்பட்டது.

★ 1995-படிவ நிரலாக்க மொழி பி.எச்.பி.வெளியிடப்பட்டது.

★ 2006-அல்கொய்தாவின் ஈராக்கியத் தலைவர் அபு முசாப் அல்-ஜர்காவி அமெரிக்க விமானக் குண்டுவீச்சில் உயிரிழந்தார்.

★ 2007-அட்லாண்டிஸ் விண்கப்பல் 7 பேருடன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவப் பட்டது.

★ 2007-இலங்கையில் புத்தளத்தில் 9 உடல்கள் மிகவும் சிதைந்த நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

★ 2007-அவுஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இடம்பெற்ற பெரும் காற்று மற்றும் வெள்ளத்தினால் 9 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1867-பிரான்க் லாய்டு, ரைட் (இ.1959)

★ 1874-சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, இலங்கையின் முன்னாள் சட்டசபை சபாநாயகர்

★ 1921-சுகார்ட்டோ, இந்தோனேசியாவின் முன்னாள் அரசுத் தலைவர் (இ.2008)


★ 1975-ஷில்பா ஷெட்டி, பொலிவுட் நடிகை

**இறப்புக்கள்**

★ 1947-எரிஃப் வீஷாஉஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசுபெற்ற அமெரிக்கர்

**சிறப்புநாள்**

★ உலகக் கடல் தினம்



★ 1845-ஐக்கிய அமெரிக்காவின் ஏழாவது ஜனாதிபதி ஆன்ட்ரூ ஜாக்சனின் நினைவு தினம் (பி.1767)

# இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 10 இன் இடைமுகம்




மைக்ரோசொப்ட் நிறுவனம் தன்னுடைய அடுத்த இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 10 இல் புதிய இடைமுகம் (Interface) ஒன்றை வழங்குகிறது. இது குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

விண்டோஸ் 8 பயன்படுத்த இருவகை இடைமுகம் கிடைக்கின்றன. வழக்கமான தொடு திரை இல்லாத பயன்பாடு மற்றும் தொடுதிரை பயன்பாடு. இவை இரண்டிலும் டைல் ஐகான்கள் பயன்படுத்தப்படுகின்றன.

டெஸ்ரொப் திரையில் தெளிவாக இவை காட்டப்படும். கும்பலாக குழப்பம் ஏற்படுத்தும் வகையில் இருக்காது. மைக்ரோசொப்ட் அங்கீகரிக்கும் சொப்ட்வெயர் தொகுப்புக்களை இன்ஸ்டோல் செய்வதும் அவற்றை நீக்குவதும் மிக எளிதாக மேற்கொள்ள விண்டோஸ் 8 உதவிடும்.

மெட்ரோ இடைமுகத்தை விரும்பாதவர்கள் வழக்கம்போல டெஸ்ரொப் தோற்றத்தை வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம்.

ஆனால், தற்போது விண்டோஸ் 8 பயன்படுத்திப் பார்த்த பயனாளர்கள் அனைவரும் மெட்ரோ இடைமுகப் பயன்பாட்டினையே அதிகம் விரும்புவதாகக் கருத்து தெரிவித்துள்ளனர். இதனாலேயே இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 10 இல் இதனுடன் இணைந்த வகை இடைமுகம் தரப்படுகிறது.


இதுவரை தரப்பட்ட கென்ட்ரோல் பட்டன்கள், ரூல்பார் மற்றும் ஸ்குரோல் பார்கள் பயன்படுத்தாத போது திரையில் தெரியாத வகையில் அமைந்திருக்கும்.

இதுவே இதில் தரப்பட இருக்கும் மிகப் பெரிய மாற்றமாகும். எனவே, வழக்கமான இணையத்தேடல் என்பது ஏறத்தாழ முழுத்திரைக் காட்சியாக அமையும். இப்போது எப்11 கீ அழுத்திப் பெறும் முழுத்திரைக் காட்சியாகவே இது இருக்கும்.

வழக்கமாக இன்டர்நெட் எக்ஸ்புளோரர் திறந்தவுடன் நாம் அமைத்துள்ள ஹோம் பேஜ் கிடைக்கும். அல்லது காலியான ஒரு பக்கம் கிடைக்கும்.

புதிய இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் இரண்டு பிரிவு டைல்ஸ் அமைப்பு கிடைக்கும். ஒரு பிரிவில் பயனாளர் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.


# சிறுவர்களுக்கான புதிய டெஸ்டொப் கம்பியூட்டர்



சிறிய குழந்தைகள் முதல் படிக்கும் மாணவர்கள் வரை அனைவருக்கும் பயன்படும் வகையில் டெஸ்டொப் கம்பியூட்டர் அறிமுகமாகி உள்ளது. முற்றிலும் வண்ணமயமாக்கப்பட்ட குழந்தைகள் விளையாடும் பிளேஸ்டேசன் போல் இது அமைந்துள்ளது. இந்த டெஸ்டொப் கம்பியூட்டருக்கு பிரிமியர் கிட்ஸ் சைபர் நெட்ஸ்டேசன் என்று பெயர் வைத்துள்ளனர். தண்ணீர் கீபோர்டில் பட்டால் கூட எந்த பழுதும் ஏற்படாது என்பதில் இருந்து மொனிட்டரை தொட்டு இன்புட் கொடுக்கலாம் என்பது வரை அனைத்தும் கொஞ்சம் வித்தியாசமாகத்தான் உள்ளது.

இன்டெர்நெட்டில் ஆபாச இணையத்தளங்களை தடுக்கும் மென்பொருளும் எந்த வைரஸும் கம்பியூட்டரை தாக்காத வண்ணம் உள்ள மென்பொருள்களையும் வடிவடைத்துள்ளனர். இதனுடன் குழந்தைகள் அறிவை வளர்த்துக் கொள்ள மூன்று முக்கியமான பக்கேஸும் சேர்த்தே கொடுக்கின்றனர். இதில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்படுத்த டொட்லர் என்ற முதல் பக்கேஸ். இரண்டாவது 5 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்படுத்த கைண்டர் கொர்டன் என்ற பக்கேஸ். மூன்றாவதாக 11 முதல் 15 வயது வரை உள்ள தொடக்க மற்றும் மேல்நிலை மாணவர்களுக்கான பக்கேஸும் உள்ளது. இத்தனை வசதிகளும் உள்ள இந்த டெஸ்டொப் கம்பியூட்டரின் விலை கொஞ்சம் அதிகம்தான். இதன் விலை 1999 அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜிமெயில் சற்றில் தேவையற்ற நபர்களை தடை செய்வதற்கு




ஜிமெயில் பயன்படுத்தும் நண்பர்கள் அனைவருக்கும் மிகப் பெரிய உதவியாய் இருப்பது சாட் வசதி, அதே சிலசமயம் பிரச்சினை தரும் ஒன்றாக மாறிவிடும். இதற்கு காரணம் யார் என்று தெரியாத நபர்கள் பலர் சாட்டில் வந்து சேர்வது தொந்தரவை தரும். இவர்கள் வருவதற்கு முன்னரே தடுக்கும் வசதியும் உள்ளது.

உங்கள் Chat- இல் Automatic ஆக நண்பர்கள் சேர்வதை தடுக்க முதலில் உங்கள் ஜிமெயில் கணக்கில் நுழைந்து செட்டிங்க்ஸ் பகுதிக்கு செல்லவும். அதில் Chat என்ற Tap- ஐ தெரிவு செய்யவும். இப்போது வரும் பக்கத்தில் Auto-add suggested contacts என்ற பகுதியில் இரண்டாவது Option ஐ தெரிவு செய்து Save செய்து விடவும்.

இனி ஒருவர் உங்கள் Chat லிஸ்ட்க்குள் வரவேண்டும் என்றால் கண்டிப்பாய் நீங்கள் அவரது Request-ஐ Approve செய்தாக வேண்டாம். இதன் மூலம் தேவை இல்லாதவர்கள் உங்கள் Chat இல் சேர்வதை தவிர்க்கலாம்.


உங்கள் Chat-List இல் நிறைய தேவையில்லாத நபர்கள் இருந்தாலோ அல்லது நீங்கள் வேண்டாம் என்று நினைத்தாலோ அவர்களை உங்கள் சாட் லிஸ்ட்டில் இருந்து நீக்கலாம்.

எந்த நபரை நீங்கள் நீக்க விரும்புகிறீர்களோ அவரது பெயருக்கு நேரே உங்கள் Mouse Cursor ஐ கொண்டு செல்லவும். இப்போது ஒரு சிறிய பகுதி தோன்றும். அதில் More என்பதை தெரிவு செய்யவும்.

இப்போது வரும் மெனுவில் Block என்பதை கொடுத்து விடவும். அவ்வளவே இனி அந்த நபர் உங்கள் Chat-List இல் வர மாட்டார்.




# QR Code Generator மென்பொருளின் பயன்கள்



பார்கோட் முறையில் தரவுகளை இரகசியமாக சேமிப்பது போன்று சில சாதனங்களை உடனடியாக இனம் கண்டு கொள்ளச் செய்வதற்கு QR Code (Quick Response Code) முறை பயன்படுத்தப்படுகின்றது.

படங்கள் வடிவில் அமைந்தவையாக காணப்படும் இந்த குறியீடுகளை தானாகவே உருவாக்குவதற்கு QR Code Generator எனும் இலவச மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1.6 MB அள்வுடைய இந்த மென்பொருள் விண்டோஸ் இயங்குதளங்களில் மட்டுமே நிறுவக்கூடியது என்பதுடன் இம்மென்பொருள் மூலம் குறியீடுகளை BMP, JPG, PNG, GIF, TIFF, EMF ஆகிய கோப்பு வடிவங்களாக மாற்ற முடியும் என்பது குறிப்பிடத்க்கது.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 151



ஹிட்லர்

### 8. ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி பலமடைதல்

1943 அக்டோபரில் மாஸ்கோவில் நடைபெற்ற சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் அயல்விவகாரத்துறை அமைச்சர்களின் மகாநாடு யுத்தத்தின் காலக்கெடுகளை குறைப்பதைப் பற்றிய பிரச்சினையை விவாதித்தது. ஆனால், அமெரிக்காவும் பிரிட்டனும் 1944 இல், மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பது சம்பந்தமாக திடமான உறுதிமொழிகளை அளிக்கவில்லை. ஜேர்மனியைப் பிரித்து, மத்திய மற்றும் தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அரசுகளின் சமஷ்டி ஒன்றிணைப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென அவர்கள் வற்புறுத்தினர். சோவியத் யூனியன் இத்திட்டங்களைத் திடமாக எதிர்த்து, மக்கள் தமது எதிர்காலத்தைத் தாமே முடிவு செய்து கொள்ளும்படி விட்டுவிட வேண்டும் என்றது. இது அவர்களின் நலன்களுக்கும் மற்றும் சோவியத் யூனியன், மற்ற நாடுகளுக்கு யுத்தத்திற்குப் பிந்தைய பாதுகாப்பை அளிக்கும் இலட்சியங்களுக்கும் முற்றிலும் உகந்ததாயிருந்தது.

மூன்று வல்லரசுகளின் தலைவர்களாகிய ஸ்டாலின், ரூஸ்வெல்ட் மற்றும் சர்ச்சில் ஆகியோர் கலந்துகொண்ட டெஹ்ரான் மகாநாட்டில் பாசிச

வி.அ.மத்சுலேன்கோ

ஜேர்மனியை முறியடிப்பதை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளைப் பற்றிய பிரச்சினை முக்கியப் பிரச்சினையாக இருந்தது. 10 இலட்சம் பேர்களடங்கிய பிரிட்டிஷ்- அமெரிக்க இறக்குப் படைத் துருப்புகளுடன் மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. சோவியத் யூனியனின் வற்புறுத்தலுக்கு ஏற்ப பால்கனில் நேச நாட்டுத் துருப்புகள் நுழைவதைப் பற்றிய பிரிட்டிஷ் திட்டம் கைவிடப்பட்டது.

டெஹ்ரான் மகாநாட்டிற்குப் பின் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: மூன்று வல்லரசுகளின் தலைவர்களும் "கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளின் அளவுகள் மற்றும் நேரங்கள் சம்பந்தமாக முழு உடன்பாட்டிற்கு வந்துள்ளனர்... தரையில் ஜேர்மனியப் படைகளையும் கடலில் இவற்றின் நீர்மூழ்கிக் கப்பல்களையும் ஒழித்துக் கட்டவும் வானிலிருந்து ஜேர்மனிய இராணுவத் தொழிற்சாலைகளை அழிக்கவும் உலகிலுள்ள எந்த சக்தியும் நமக்கு தடையாக இருக்காது" யுத்தத்திற்குப் பிந்தைய ஒத்துழைப்பு, நிரந்தர சமாதானத்திற்கு ஏற்பாடு செய்வது, ஜேர்மனியின் எதிர்காலம், கேர்சன் கோடு என்றழைக்கப்படுவதிலிருந்து ஓதெர் ஆற்றின் கோடு வரையிலான போலந்தின் எல்லைகள், கேனிக்ஸ்பெர்கை சோவியத் யூனியனுக்கு அளிப்பது ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகளும் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டன. ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியை மேற்கொண்டு பலப்படுத்துவதில் டெஹ்ரான் மகாநாடு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. இதன் முடிவுகள் சமாதான நாட்டமுள்ள சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் புதிய வெற்றியாகத் திகழ்ந்தன.



யால்டா ( கிரீமிய) மகாநாடு -1945

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

1945 பெப்ரவரியில் நடைபெற்ற மூன்று வல்லரசுத் தலைவர்களின் யால்டா மகாநாடும் முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றியது: பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் மீது நேச நாட்டு இராணுவங்கள் தாக்குதல் தொடுக்கும் காலக்கெடுகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஜேர்மனிய நிபந்தனையின்றி சரணடைந்ததும் தான் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது என்றும் பாசிசத்தையும் நாசிசத்தையும் ஒழித்துக் கட்டுவது என்றும் போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பது என்றும் ஜேர்மனியின் இராணுவ- தொழிற்துறை உள்ளாற்றலை அழிப்பது என்றும் இது ஐரோப்பிய மக்களுக்கு ஏற்படுத்திய இழப்புகளை ஈடுகட்டுவது என்றும் சுதந்திரமான ஜனநாயக ஜேர்மனியை ஏற்படுத்துவது என்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சோவியத் யூனியனின் முன்முயற்சியின் பேரால் கிரீமிய மகாநாட்டு அறிக்கையில் பின்வருமாறு எழுதப்பட்டது: "ஜேர்மனிய இராணுவ வெறியையும் நாசிசத்யையும் ஒழித்துக்கட்டுவதும் உலகின் அமைதியை ஜேர்மனி இனிமேல் என்றுமே



யால்டா மகாநாட்டின் முக்கிய மூன்று வல்லரசர்களான சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின்-1945

குலைக்காதிருப்பதற்கானதொரு உத்திரவாதத்தை ஏற்படுத்துவதும் நமது உறுதியான இலட்சியமாகும்... ஜேர்மனிய மக்களை அழிப்பது நமது நோக்கமல்ல."

மகாநாட்டில் உருவாக்கப்பட்ட "விடுவிக்கப்பட்ட ஐரோப்பாவைப் பற்றிய பிரகடனம்," விடுதலை செய்யப்பட்ட நாடுகளின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்க்கும்போது சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஒத்துழைக்க வேண்டுமென முன்னறிவித்தது. ஜேர்மனியிடமிருந்து நஷ்டஈடு பெறுதல், போலந்திலும் வெளிநாட்டிலும் உள்ள ஜனநாயகப் பிரமுகர்களின் பங்கேற்புடன் அப்போதிருந்த போலந்தின் தற்காலிக அரசாங்கத்தை மாற்றியமைத்தல் ஆகியவை பற்றிய சோவியத் யூனியனின் முன்மொழிவுகளை அமெரிக்காவும் பிரிட்டனும் ஒப்புக்கொண்டன. பாசிச ஜேர்மனி சரணடைந்து 2-3 மாதங்களுக்குப்பின் ஜப்பானுக்கு எதிராக யுத்தம் தொடுக்க சோவியத் யூனியன் ஒப்புக்கொண்ட ஓர் உடன்படிக்கை மகாநாட்டில் ஏற்கப்பட்டது.

இம்மகாநாடுகள் எல்லாம் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியைப் பலப்படுத்துவதில் முக்கிய பங்காற்றின. இவை சர்வதேச ஒத்துழைப்பின் நடைமுறை ரீதியாக நிறைவேற்றமாயும் இதன் வாய்ப்பு மற்றும் முக்கியத்துவத்தின் தெள்ளத்தெளிவான மெய்ப்பாடாகவும் அமைந்தன. இவற்றின் தீர்மானங்கள் பிரிட்டிஷ்- அமெரிக்க- சோவியத் கூட்டணி வலுவடைய உதவின. அதன் எதிரியின் மீது பேரிடிகளாக விழுந்தன. இவை அனைத்திலும் முக்கியப் பங்கு சோவியத் யூனியனைத் தான் சாரும்.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கட்டாபாரை மீன்களின் போசணைக்கூறுகள்

உணவானது மனிதனது அன்றாட தேவைகளில் ஒன்றாகும். இயற்கையில் கிடைக்கக்கூடிய உணவுகளில் ஒன்று கடல் உணவாகும். 2009 ஆம் ஆண்டில் இலங்கையின் மீன் உற்பத்தியானது அதிக அளவை (340 000 MT) அடைந்துள்ளது. இலங்கை மீன்பிடி திணைக்கள புள்ளி விபரங்களின் படி இலங்கையின் மொத்த உற்பத்தியில் 4.5 வீதமான உற்பத்தியானது யாழ். மாவட்டத்திலிருந்து பெறப்படுகின்றது. அத்துடன் இவற்றுள் அதிகளவு பிடிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படும் மீனினங்களில் ஒன்று கட்டாபாரையாகும்.

உப்பிட்டு உலர்த்தப்பட்ட கட்டாபாரை மீனினங்களை யாழ்.மாவட்ட மக்கள் அதிகளவில் விரும்பி கொள்வனவு செய்கின்றனர். அத்துடன் இவை உடன்பிடித்த மீன்களாக ஏனைய இடங்களிற்கு கூலர் (Cooler) மூலம் பனிக்கட்டிகளில் இட்டு கொண்டு செல்லப்படுகின்றது. இம்மீனின் 1 Kg அளவின் சந்தைப்பெறுமதியானது ரூபா 300 ஆகும்.

கட்டாபாரை மீன்களில் நான்கு வகையான இனங்கள் இலங்கையில் உண்டு என விஞ்ஞான ரீதியாக அடையாளங் காணப்பட்டுள்ளது. (FAO,1994)


1, *Scomberoides lysan (Forsskal,* 1775)- இரட்டை புள்ளிகள் கொண்ட குயின் மீன்

2.*Scomberoides commersonianus (Lacepede,* 1802)- ரலாங் குயின் மீன்

3.*Scomberoides tol (Cuvier,* 1832)- ஊசிச்செதில் உடைய குயின் மீன்


4.*Scomberoides tala (Cuvier,* 1832)- பரேட் குயின் மீன்

1.*Scoberoides lysan*





6 தொடக்கம் 8 வரையான வட்டமான புள்ளிகள் பக்கக்கோட்டிற்கு மேலாகவும் கீழாகவும் காணப்படும். மேற்தாடையானது கண்களின் பின் விளிம்பு வரை நீண்டு காணப்படுகின்றது.

2.*Scomberoides commersonianus*




5 தொடக்கம் 8 வரையான புள்ளிகள் பக்கக்கோட்டிற்கு மேலாக காணப்படும். மேற்தாடையானது கண்களிற்கு அப்பால் நீண்டு காணப்படுகின்றது.

3.*Scomberoides tol*




5 தொடக்கம் 8 வரையான நீள்வட்டமான புள்ளிகள் பக்கக்கோட்டின் மேலே காணப்படும். மேற்தாடையானது கண்களிற்கு பின்னர் நீண்டு காணப்படாது.

4.*Scomberoides tala*




நான்கு தொடக்கம் எட்டு வரையான நீண்ட புள்ளிகள் பக்கக் கோட்டிற்கு அண்மையாக காணப்படும். மேற்தாடையானது கண்களிற்கு அப்பால் நீண்டு காணப்படுகின்றது.

இவ்வகையான மீனினங்களில் முதல் மூன்று மீனினங்களும் அதிகளவில் பிடிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றது.

இம் மீனினங்கள் அதிகளவில் உப்பிட்டு சூரிய ஒளியில் உலரவிட்டு கருவாடாக்கப்படுகின்றது. இவ் வகையிலே கருவாடு போடப்படும் மீனினங்களே மக்களால் அதிகளவில் விரும்பி உண்ணப்படுகின்றது.

இக்காலச் சூழ்நிலைகளில் மக்கள் அதிகளவில் நோய்களிற்கு ஆளாகின்றனர். இதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று தரமற்ற உணவை உட்கொள்ளல் ஆகும். இயற்கை உணவான மீனினது போசணைத் தரத்தினை அறிதல் ஒரு முக்கியமான விடயமாகும். இது மக்களிற்கு ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

அதிகளவிலான போசணை ஆராய்ச்சியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை யாவது மீன் உணவு உட்கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இதனால் அதிகளவு பயன்களைப் பெறக்கூடியதாயிருக்கும். ஏனெனில் மீன் உணவு

| போசணைக்கூறுகள் | *Scomderoides lysan* | *Scomderoides tol* | *Scomderoides commersonianus* |
|---|---|---|---|
| நீர் | 75.67% | 74.42% | 72.57% |
| புரதம் | 19.47% | 18.99% | 21.68% |
| கொழுப்பு | 0.89% | 0.59% | 1.00% |
| காபோவைதரேற்று | 0.07% | 0.3% | 0.22% |
| கனியுப்பு. | 1.42% | 1.49% | 1.6% |

களும் மீன் எண்ணெய்களும் அதிகளவில் பலவகையான நிறைவடையாத கொழுப்பமிலங்களைக் கொண்டுள்ளன.

இது உடலிற்கு கேடு விளைவிக்கும் கொலஸ்ரோலினைக் குறைக்கக்கூடிய தன்மை வாய்ந்தவையாகும். வேறுபட்ட மீனினங்கள் வேறுபட்ட தரத்தைக் கொண்டுள்ளன. இத்தரமானது காலநிலை, மீனின் அளவு, வயது என்பவற்றுடன் வேறுபடக்கூடியது.

புரதம், கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புக்கள், காபோவைதரேற்றுக்கள் ஆகியன மிகமுக்கியமான மீன் உணவிலுள்ள போசணைக் கூறுகளாகும். விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் பிரதானமாக மீனில் உள்ள போசணைக்கூறுகளை பின்வரும் வீதத்தில் காணப்படுகின்றது என கூறுகின்றனர்.

அதாவது 16-21% புரதம் எனவும் 0.25-5% கொழுப்புக்கள் எனவும் 1.2-1.5% கனியுப்புக்கள் எனவும் 0-0.5% காபோவைதரேற்றுக்கள் எனவும் 66-81% நீர் எனவும் வகைப்படுத்தப்படுகின்றனர். மீன்கள் ஏனைய உணவுகளிலிருந்து வேறுபடுத்தப்படக்கூடிய ஓர் வகையாகும். ஏனெனில் இவை குறைந்தளவு கொழுப்புக்களையும் அதிகளவான புரதங்களையும் கொண்டுள்ளது.

கட்டாபாரையானது இலங்கையில் வாழும் மக்களால் உடனடியாகப் பிடிக்கப்பட்ட நிலையிலோ அல்லது கருவாடாகவோ அதிகளவு உண்ணப்படுகின்றது. இவற்றின் போசணைக்கூறுகளின் அளவினை எடுத்துக் கூறுதல் இன்றியமையாத ஓர் விடயமாகும்.

பொதுவாக கட்டாபாரையானது பாலியல் முதிர்ச்சியடைவதற்கு ஓர் குறிப்பிட்ட வயதையும் அளவையும் எடுக்கின்றது என்பது எமது ஆராய்ச்சிகளிலிருந்து அறியப்பட்டுள்ளது. பொதுவாக யாழ்ப்பாணத்தில் 53-60CM முழு நீளத்தையும் 700-1100g எடையையும் கொண்டுள்ள மீனினங்கள் அதிகளவிலே கருவாடாக்கப்படுகின்றது.

இந் நீள வீச்சுக்குள் அடங்கும் மீன்களின் போச ணைக்கூறுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

இம்மீனினங்களின் போசணைக் கூறுகள், அவற்றின் நீளம், நிறை, வயது என்பவற்றுடன் வேறுபடுகின்றமை எமது ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டுள் ளது.

போசணைக்கூறுகளில் நீரானது அதிகளவிலே மீன்களில் காணப்படுகின்றது. *Scomberoidescommer sonianus* ஏனைய மீனினங்களிலும் பார்க்க அதிகளவு புரதத்தையும் கொழுப்புக்களையும் கொண்டுள்ளது. காபோவைதரேற்றுக்கள் மிகக்குறைந்தளவில் மற்றைய கூறுகளுடன் ஒப்பிடும்போது தவிர்க்கப்படக்கூடிய அளவில் காணப்படுகின்றது. கனியுப்புக்களும் ஒப்பீட்டளவில் அதிகம் காணப்படுகின்றது. விஞ்ஞான ஆராய்ச்சியாளர் Ackman (1974) பிரதான மீனில் உள்ள கொழுப்பின் அளவினைக் கொண்டு மீன்களை பின் வருமாறு பிரிக்கின்றனர்.

| மீனின் வகை | கொழுப்பின் அளவு |
|---|---|
| மிகக் குறைந்த கொழுப்பு மீன் | <2% |
| குறைந்த கொழுப்பு உள்ள மீன் | 2-4% |
| நடுத்தர அளவுள்ள மீன் | 4-8% |
| அதிக கொழுப்பு மீன் | >8% |

ஆகவே மேற்காட்டிய அட்டவணையின் படி 53-60 உது முழு நீள அளவில் உள்ள கட்டாபாரைகளானது கொழுப்பு குறைந்த இனத்தினுள் அடக்கப்படுகின்றது. எனவே இந்த நீள அளவில் உள்ள மீன்கள் சிறந்த போசணை வழங்கக்கூடியதாக திகழ்வதுடன் மக்களால் உணவாக கொள்வதற்கும் மிகவும் சிறந்ததென தற்போதைய ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துரைக்கின்றன.

திருமதி சுதர்சினி சத்தியரூபன்
உதவி விரிவுரையாளர்,
மீன்பிடியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 65

**Base Ball விளையாட்டுக்களம் எவ்வாறு அழைக்கப்படும்?**

விடைகளை 18.06.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

ஜே. பிரபாகர்
(செயலாளர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
இரசாயனவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 64 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

என்.கமலசரவணபவ சர்மா
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**புதிர் 64 இற்கான கேள்வியும் விடையும்:**

**கேள்வி:- செயற்கைக் குருதி தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பக்ரீரியா எது?**

**விடை:-** Escherechia coli (E.coli)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 65

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# காணாமல்போன அருட்தந்தையர்கள் தொடர்பில்

# ஜனாதிபதி மஹிந்தவிடம் கேள்வியெழுப்புங்கள்

## வி. உருத்திரகுமாரன் பாப்பரசருக்குக் கடிதம்



அண்மையில் இலங்கையின் மற்றுமொரு அமைச்சரவை உறுப்பினர் ஆண்டகையினை மிரட்டியுள்ளதுடன் அவரது சமூகப் பணிகள் பற்றியும் மிரட்டும் பாணியில் நடந்துள்ளார்.

(கொழும்பு)

**இலங்கைத்தீவில் கத்தோலிக்கக் குருமார்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள் ளமை தொடர்பிலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகைக்கு ஏற்பட்டுள்ள உயிராபத்துத் தொடர்பிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வினவுங்கள் என புனித பாப்பரசர் 16 ஆம் பெனடிக்கிற்கு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பிரித்தானியாவுக்கான பயணத்தினை தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வத்திக்கானுக்கு சென்று புனித பாப்பரசரை சந்திக்கவுள்ள நிலையில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் ஆயுதப் படைகளினால் பல கத்தோலிக்க குருமார்கள் பலர் படுகொலை செய்யப்பட்டும் கடத்திச் செல்லப்பட்டும் காணாமல்போயும் உள்ளனர் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ள அவர் இவர்களில் சில குருமார்கள் இன்னும் உயிருடன் இருக்கலாம் எனவும் அவர்கள் இரகசியமான இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதான ஐயம் நிலவுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அருட்தநந்தை மேரி பஸ்தியான், அருட்தந்தை ஈகுஜின் கோர்பர்ட், அருட்தந்தை ச. செல்வராசா, அருட்தந்தை திருச்செல்வம் நிகால் ஜிம் பிறவுண், அருட் தந்தை பாக்கிரஞ்சித், அருட்தந்தை சேவியர் கருணாரத்தினம், அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்பு ஆகியோர் நிலை குறித்து விவாதியுங்கள்.

அருட்தந்தை பிரான்சிஸ்.ஜோசப் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி முன்னாள் அதிபராவார்.

இதேவேளை மன்னார் மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு இலங்கை அரசாங்கத்தினாலும் இனவாதிகளினாலும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்தும் தெரியப்படுத்தியுள்ளார்.

அதில் 2009 இல் இலங்கை இராணுவத்தினரது இறுதியுத்த காலத்தின் போது ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பிலும் தமிழ்மக்கள் பெருந்தொகையாக கொலை செய்யப்பட்ட விடயம் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் சபைக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இலங்கை அரசுடன் இணைந்து செயற்படும் ஜாதிக ஹெல உறுமய இராஜப்பு ஜோசப்பு ஆண்டகையைக் கைது செய்யும்படி பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

மிகக் கூடுதலாக கத்தோலிக்க மக்கள் வாழும் மன்னார் மாவட்டத்திலும் புத்தர் சிலைகள் நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ஆசியாவின் மிகப் பழைமை வாய்ந்த தேவாலயங்களில் ஒன்றான மடுத்தேவாலயமும் மன்னார் மாவட்டத்தில் தான் அமைந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும் என புனித பாப்பரசருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளார். (அ-2)

# ஆளும் கட்சி தொழிற்சங்கங்கள் போராட்டத்திற்குத் தயாராகின்றன

## சம்பள உயர்வு வழங்கப்படாமையே காரணம்

(கொழும்பு)

ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் உறுதியளிக்கப்பட்டதைப் போன்று சம்பள உயர்வு வழங்கப்படாமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதித்தேர்தலின் போது 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வாக்குறுதியளித்திருந்தார்.

இதேவேளை 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக ஆளும் கட்சி வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதி மீது நம்பிக்கை கொண்டு ஆளும் கட்சி தொழிற்சங்கங்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்ததாக இலங்கைச் சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் தலைவர் விமலரட்ன தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்பார்த்தளவு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. சம்பள உயர்வோ அல்லது வாழ்க்கைச் செலவு அதிகரிப்போ இதுவரையில் வழங்கப்படாமை அதிருப்தி அளிக்கின்றது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கு சார்பான 32 தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைந்து போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

அண்மைக்காலமாக பொருட்கள் சேவைகளின் விலைகள் பாரியளவில் உயர்வடைந்துள்ளதாகவும் இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாகவும் தொழிற்சங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ-2)

## பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறுமென சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (அ-7)




அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு முதலாவதாக நேற்று முன்தினம் வாகனங்களை ஏற்றிக்கொண்டு வந்துள்ள கப்பல் நங்கூரமிட்டு நிற்பதைப் படத்தில் காணலாம்.







## வீரமாகாளியம்மன் மஹோற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை திருமஞ்சத் திருவிழாவும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கைலாய வாகனமும் நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பரத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெறும் என தேவஸ்தான சபை அறிவித்துள்ளது. (அ-9-17)

# அன்பை கொண்டாடுதல்

ஆன்மீகம் 58



### உற்சாகம்

நீங்கள் உங்களை எப்படிப் பார்க்க விரும்புகிறீர்கள்? மகிழ்ச்சியாக உற்சாகம் கொப்பளிப்பவராகவா? அல்லது சோர்வாக, திருப்திப்படுத்த முடியாதவராகவா?

சில சமயம், யாராவது நம்மை வந்து என்ன ஏது என்று கேட்டு சாந்தப்படுத்தமாட்டார்களா என்ற எண்ணம் கொண்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிறீர்கள். ஒரே சமயத்தில் ஒருவரால் எல்லோரையும் திருப்திப்படுத்துவது என்பது நடக்காத செயலாகும். இவ்வாறு முகத்தைத் தூக்கிவைத்துக்கொள்பவர்கள், தாங்களே மற்றவர்களை தங்களிடம் நெருங்கவிடாமல் செய்து கொள்கிறார்கள். காதலர்களிடயே இந்த ஊடல் அடிக்கடி நிகழும். ஒருவர் மற்றவரை சமாதானப்படுத்த நிறைய சக்தியை செலவிடுவர்; மகிழ்ச்சியைக் குறையவிட்டு, அந்த நொடியின் சந்தோஷத்தைக் கெடுத் துக்கொள்வர்.

எப்பொழுதாவது சில சந்தர்ப்பங்களில் உங்கள் மனநிலையை வெளிப்படுத்த இவ்வாறு நடந்து கொள்வது பரவாயில்லை. ஆனால், அடிக்கடி இப்படிச்செய்வதை வழக்கமாகக் கொள்வது உங்களை நீங்களே துன்புறுத்திக் கொண்டு உங்களை நேசிப்பவரையும் இம்சிப்பதாகும்.

உங்களுக்கு ஏதேனும் சில சங்கடங்கள் வந்தால் நீங்களே உங்களை சாந்தப்படுத்தி, திருப்திப்படுத்திக் கொண்டுவிடுங்கள். மற்றவர்கள் அதைச்செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். மற்றவர்கள்தான் வந்து சாந்தப்படுத்தவேண்டும் என்று நினைப்பது மடத்தனமான முரட்டுத்தனத்தின் அடையாளம்; அறியாமையின் ஆரம்பம். **நீங்கள் விரும்புவது அனைவரின் பார்வை; ஆனால், நீங்கள் அடைவதோ "சோர்வை!"**

குறைகூறும் முகத்தோடு இறைவனை நெருங்குவது நடவாத செயல். குறைகூறும் முகம் விழிப்புணர்வு அற்ற மனதின் அடையாளம். குறை கூற வேண்டுமென்றால் கடவுளிடம் அல்லது குருவிடம் குறை கூறுங்கள். ஏனெனில், இருவருக்குமே காதுகள் மூடப்பட்டுள்ளன! என்ன வந்தாலும் உற்சாகம் குறையாதவராக மாறுங்கள்!!!



### மதித்தல்

நீங்கள் எதை மதித்தாலும் உங்களைவிட அந்த விடயம் பெரிதாகிவிடுகிறது.

உங்களுடைய எல்லா உறவு முறைகளிடத்தும் நீங்கள் மதிப்பு வைத்திருந்தால் உங்கள் அந்தக்கரணம் விரிவடைகிறது. பிறகு உங்களுக்கு சின்ன விடயங்கள்கூட பெரிதாகவும், விசேடமானதாயும் மதிப்புடையதாயும் தெரிகிறது. ஒவ்வொரு சிறிய படைப்பும் கௌரவமானதாகத் தெரிகிறது. உறவு முறையில் வைத்துள்ள மதிப்புத்தான் அதைக் காப்பாற்றும்.

இவ்வுலகம் முழுவதின் மீதும் மதிப்பு வைத்திருந்தால், இவ்வுலகம் முழுவதுடன் நீங்கள் நல்லலயம் அல்லது ஒத்திசைவுடன் இருப்பீர்கள். அதன்பிறகு இவ்வுலகில் எதையும் நீங்கள் மறுத்து ஒதுக்கவோ, எதிர்க்கவோ மாட்டீர்கள்.

பெரும்பாலும் உங்களிடம் இருப்பதை நீங்கள் மதிக்கத்தவறிவிடுகிறீர்கள். அவ்வாறு மதிப்பை உணராதுபோவது உங்களை அறியாமலேயே நடந்து விடுகிறது. உங்களுடையது என்பதை நீங்கள் மதிக்கும் பொழுது, பேராசை, பொறாமை இவற்றிலிரு ந்து நீங்கள் விடுபட்டு விடுவீர்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் மதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்!

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

58


## விதி இரேகையின் குற்றங்குறைகள்

1. விதி இரேகையில் குறுக்கிட்ட துண்டு இரேகைகள் பிரவிருத்திக்குத் தடைகளாயமைகின்றன. ஒவ்வொன்றும் அந்தந்தக் கால அளவில் ஏற்படுகிறது. இது எவ்வளவுக்குப் பதிந்து காணப்படுகிறதோ அவ்வளவுக்குக் கடுமை என்பதை சிந்திக்க வேண்டும். குறுக்கிட்ட துண்டு இரேகை மெல்லிதாகப் பட்டும்படாமலுமிலிருந்தால் தடை சுலபமாய் மாறிவிடும். என்றாலும், மனதிற்கு அடுத்தடுத்து சங்கடத்தை கொடுப்பதாகும். குறுக்கிட்ட துண்டு இரேகை இரண்டாக விதி இரேகையை வெட்டிவிடுமாயின் தொழில் அல்லது பிரவிர்த்திக்கு ஆபத்தெனத் திட்டமாகக் கருத வேண்டும். உத்தியோகமாயின் ஏதாவது காரணங்கொண்டு நீங்கிவிடும். தொழிலாயின் நடைபெறுவதற்குத் திடீரென ஒருதடை காணரமாய் நின்றுவிடும். வெட்டுப்பட்ட விதி இரேகைகளுக்கு இணைப்பு காணப்படில் வெகு சிரமத்தின் மேல் சீர்படும்.

2. விதி இரேகை துண்டு துண்டாய் அமைந்துவிடின் மிகச் சங்கடத்தைக் குறிக்கும். ஒவ்வொரு விதிஇரேகையின் துண்டுக்கும் தனித்தனி பிரவிர்த்தியேயாகும். விதி இரேகையின் துண்டுகளின் இடைவெளியான கால அளவில் வருமானமில்லை என்பதும் துரதிர்ஷ்டம் என்பதும் அறியத்தக்கது. வாழ்வு சிக்கலாயும் மனது சங்கடமாயுமிருக்கும். புதிய பிரவிர்த்திக்கே முயற்சி செய்ய வேண்டும். அடுத்தடுத்து தடைப்படுவதால் மனம் சாந்தி பெறாது. வாழ்நாளெல்லாம் கவலையுடையதாயிருக்கும். விதி இரேகையில் இடைவெளி பெரிதாயிந்தால் நீண்ட காலம் துரதிர்ஷ்டமென்பதைக் குறிக்கும்.

3. துண்டுபட்ட விதி இரேகைகளின் இடைவெளியின் பக்கத்தில் இரேகையிருந்தாலும், சதுரமான இணைப்பு அமைந்திருந்தாலும் சீர்படுமென்பதை அறிவிக்கும். அதாவது பலவித சங்கடத்துக்குட்பட்டு, மிகுந்த பிரயாசையின் மேல் காரிய சித்தியாவதைக் குறிக்கும். இதற்கு மனோபலமும் இடைவிடா முயற்சியும் அவசியமாகும். இதற்கு இரண்டு கைகளையும் பார்க்க வேண்டுமாவென்ற கேள்வி உதிக்கலாம். அநேகரின் மறு கையைப் பார்த்தவரை அது ஆதரவளிப்பதாயில்லை. நல்லொழுக்கமுள்ளோர் கஷ்டப்பட்டாலும் புத்தியின் பலத்தால் முன்னேற்றமடையலாம். தவறான வழியில் தடுமாற்றமடைவோருக்கு மறுகை சாதகமாயிராது. இரேகை பார்ப்போர் இதைச் சிந்தித்துப் பார்க்கக்காது விதி இரேகை வெட்டுப்பட்டவிடத்து மறுகையையும் பார்ப்பது நலமாகும்.

தீவினைப் பயன் வந்தே தீருமென்றுணரும்போது எவ்வளவு அறிஞனாயினும் புத்தி மாறுபட்டு வினையில் புகுந்து விடும். தீவினையை அனுபவிக்க வேண்டியவருக்கு அக்காலம் சமீபித்த போது, வாக்கு, மனம், அடக்கம், ஒழுக்கமிருந்த போதும், கற்பனையாகவேனும் ஒரு கதை ஏற்பட்டு விசாரணை நீதியின்றியே வினை புகுந்துவிடும். இது சனீஸ்வரன் திருவிளையாடல். இதை எதிர்த்துப் போராடுவதால் உள்ளதும் நீங்கி அதிக வறுமைக்குட்படுவர். அறிவாளி அடங்கி ஒடுங்கி நற்காலத்தை எதிர்பார்த்திருப்பர்.


1 2 3 4

புருஷர்கள் வலக்கையில் இரேகை பின்னப்பட்டும், இடக் கையில் குற்றமில்லாமலும் விதி இரேகை அமையக் காணலாம். இது வழி தவறி எக்காரணத் தாலோ தடுமாற்றமடைவதை விளக்கும்.

4. விதி இரேகை ஒழுங்காய்ப் போயிருந்தும், மெல்லியதாயும், தடித்தும், முடிச்சு விழுந்தது போலுமிருந்தால் மெல்லியதான காலத்தில் காரிய சித்தியும் மற்றக் காலங்களில் விருத்திக் குறையும் உண்டாகும். இரேகை பதிந்து பள்ளமா யும் குழிபோலுமிருந்தால் பிரவிருத்தி அக்காலத்தில் நன்மை தராது.

(தொடரும்)

சக்தி

# மாகாணத் தீர்வை ஏற்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்

## கிழக்கு முதலமைச்சர் உரை

(மட்டக்களப்பு)

**எமது சமூகத்தைப் பலமிக்க கட்டுமானங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டுமாக இருந்தால் பாரம்பரியமாக நாங்கள் பின்பற்றிய கட்சி என்ற சிந்தனையை உடைத்தெறிந்து அரசியல் சந்தர்ப்பத்தை பயன்படுத்திச் சமூகத்தை வளமாக்கிக்கொள்ள வேண்டுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்னும் எங்களை சிதைத்து விடுவதற்கும் எதுவுமே செய்யாமல் இனிய தமிழிலே பேசத் தெரிந்த அழகிய கருத்தாடல் கொண்ட மனிதர்கள் எங்களுடைய மக்களை பிரித்துச் செல்வது வேதனையாக இருக்கின்றது.

தமிழர்களுக்குப் பிரச்சினை இருந்தது, இருந்து கொண்டிருந்தது. அதை நாங்கள் மறுக்கவில்லை. இருந்தாலும் எங்களுடைய தலைவர்கள் பலவிதமான தவறுகளை இழைத்திருந்தார்கள் இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார்கள். இதையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம், வெட்கப்படுகின்றோம்.

ஏனென்றால், மட்டக்களப்பில் 14 ஆவது தேசிய விழாவினை நடத்திவிட்டு பல அறிக்கைகளை விட்டார்கள். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிதான் தங்களுக்கு எதிரான கட்சி என்று கூறினார்கள்.

ஒரு சில சம்பவம் இடம்பெற்றிருந்தாலும் எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் தான் அதை செய்திருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கிருந்தது. இருந்தாலும் ஒரு ஜனநாயக கட்சி என்ற அடிப்படையில் நாங்கள் அவர்களை தடை செய்வதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, எடுக்கப்போவதுமில்லை. அப்படி எடுத்திருந்தாலும்கூட அவர்களால் நிச்சயமாக அந்த மாநாட்டை இங்கு நடத்தியிருக்க முடியாது.

நாங்கள் சர்வதேச் அழுத்தங்கள், சர்வதேச வலைப்பின்னல்கள், சர்வதேச சூழலை கருத்திற்கொண்டு கிட்டத்தட்ட மாகாண தீர்வை ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

மக்கள் இன்னும் சிந்திக்காவிட்டால், ஆழமான கருத்தாடலை உள்வாங்காவிட்டால் ஆய்வு ரீதியான ஒரு சிந்தனையை, மாற்றத்தை கொண்டு வராவிட்டால் வரலாற்று ரீதியாக இன்னும் பின்னடைவுகளை சந்திக்க வேண்டிய ஒரு நிலை உருவாகும்.

இதை தொடர்ந்து பாதுகாத்து கொண்டு தமிழர்களின்அரசியல் பலத்தையும் காட்டிக் கொண்டு தமிழர்களின் பொருளாதாரத்தையும் கல்வியையும் மேம்படுத்தக்கூடிய பொறுப்பு தமிழர்கள் எல்லோருக்கும் இருக்கின்றது. பாரம்பரியமாக மதத்தை பின்பற்றுவது போல் கட்சியை பின்பற்றிக் கொண்டிருந்தால் எமது சமூகம் அழிந்து போகும் என தெரிவித்துள்ளார். (அ-2)

## தொழிற்சங்க நடவடிக்கைகளை அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை

### மீண்டும் போராட்டம் என்கிறது மின்சாரசபை

சம்பள கொடுப்பனவு உள்ளிட்ட கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து 24 மணி நேர பணிப்பகிஷ்கரிப்பை நடத்த இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி குறித்த பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாக சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தினால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை அரசு கண்டுகொள்ளாதிருப்பதால் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.

24 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் அரசுக்கு ஒரு மாத கால அவகாசம் இருப்பதாகவும் அதனால் உரிய தீர்வு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## புலிகளின் கோரிக்கைகளை கூட்டமைப்பும் முன்வைக்கிறது

### சிரேஷ்ட அமைச்சர் விதாரண குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைத்து வருவதாக சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது குறித்தும் முன் நிபந்தனைகளை கூட்டமைப்பு விதித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2003 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு இடைக்கால சுயாட்சி அதிகாரங்கள் தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு நிகரான கோரிக்கைகளையே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் முன்வைப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு, கிழக்கின் மீன்பிடி, விவசாயம், கடல்துறைமுகங்கள், கனியவளங்கள், ஊடகம், மோட்டார் போக்குவரத்து வரி, நீதிமன்றம் மற்றும் பொலிஸ் அதிகாரம் போன்றன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட வேண்டும் என்பதே சம்பந்தனின் கோரிக்கையாக அமைந்துள்ளது.'

நல்லெண்ண அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக் குழு அமர்வுகளில் பங்கேற்க வேண்டும்.

அரசாங்கமோ அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ முன் நிபந்தனைகளை விதித்து பாராளுமன்ற தெரிவுக்குழு அமர்வுகளில் பங்கேற்கக் கூடாது என்பதே தமது நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## கட்டணம் செலுத்தினால் மின்னொளியில் றக்பி விளையாட்டில் ஈடுபட முடியும்

### மின் பயன்பாடு குறித்து கவலையில்லை என்றார் சம்பிக்க

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கு அமைச்சர் முயல்கின்ற போது சிலர் மின்னொளியில் றக்பி விளையாட்டில் ஈடுபடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சுமார் ஆயிரம் வோல்ட் மின்குமிழ்களை பயன்படுத்தி இந்த விளையாட்டில் ஈடுபடுகின்றமை நியாயமாகுமா எனவும் கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கு மின்குமிழ்களை அணைத்து விடுமாறு கூறுகின்ற போதிலும் உயர்மட்டத்தினரின் பிள்ளைகள் மின்சாரத்தில் றக்பி விளையாட்டில் ஈடுபடுகின்றனர் என்றார்.

இதற்கு பதிலளித்த மின்சக்தி அமைச்சர் சம்பிக்க, கட்டணம் செலுத்தி றக்பி விளையாட்டில் ஈடுபட முடியும்.

குறிப்பாக இந்தியாவின் சில இடங்களில் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றமையால் மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபடுகின்ற போதிலும் இலங்கையில் இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

அத்துடன் இந்த வலயத்தில் தொடர்ந்து 24 மணித்தியாலங்களும் இலங்கையிலேயே மின்விநியோகம் இடம்பெறுவதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-7)

## எம்.பிக்கள் நுரைச்சோலைக்கு கல்விச்சுற்றுலா செல்ல வேண்டும்

### சபாநாயகர் ஆலோசனை

நுரைச்சோலை அனல் மின்நிலையம் இலங்கையின் ஒரு நவீன செயற்றிட்டமாகையால் அதை பார்வையிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்விச்சுற்றுலா மேற்கொள்ள வேண்டுமென சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று ஆலோசனை கூறினார்.

நாடாளுமன்றத்தில் ரவி கருணாநாயக்கவின் கூற்றொன்றுடன் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க முரண்பட்டபோதே சபாநாயகர் இந்த ஆலோசனை வழங்கினார்.

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தில் நிலக்கரிக்கு பதிலாக டீசல் பயன்படுத்தப்படுவது ஏன் என ரவி கருணாநாயக்க எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அதன் போதே நீங்கள் வேறு துறைகளில் நிபுணராக இருக்கலாம். ஆனால் இந்தத் துறையில் நீங்கள் அறியாமலிருப்பதாக தோன்றுகிறது. உலகில் எந்தவொரு நிலக்கரி மின் நிலையத்திலும் அதன் ஆரம்ப செயற்பாட்டிற்காக டீசல் பயன்படுத்தப்படுகிறது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார்.

அப்போது சபாநாயகர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் கல்விச் சுற்றுலாவொன்றை ஏற்பாடு செய்வது சிறந்தது என தெரிவித்தார்.

இக்கருத்தை வரவேற்ற அமைச்சர் ரணவக்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வேளையிலும் அங்கு விஜயம் செய்யலாம் எனத் தெரிவித்தார். (அ-7)






பூநகரி கமநல சேவை நிலையத்தில் 14 ஆவது தேசிய உரமானிய வார நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கமநல சேவை அபிவிருத்தி அலுவலர் ந.சுந்தரமூர்த்தி உரமானிய அனுகூலம் பற்றி விளக்கமளிப்பதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூநகரிச் செய்தியாளர்)



# சிறுவர் அரங்கம்

124

## மங்குவின் முத்துமாலை

## அம்புலி மாமா கதைகள்



வெங்கு, மங்கு என்ற இரண்டு குரங்குகள் அந்த பெரிய மரத்தில் விளையாடிக் கொண்டிருந்தன. அந்தப் பகுதியில் ஏராளமான குரங்குகள் வசித்து வந்தன. ஆனாலும் இந்த இரண்டு குரங்குகளும் நீண்ட நாட்களாக நட்புடன் பழகி எப்போதும் ஒன்றாய் சுற்றி திரிந்து காலத்தை கழித்து வந்தன. ஒருவருக்கொருவர் அன்பை பரிமாறிக் கொண்டு சந்தோஷமாய் வாழ்ந்து வந்தன.

ஒருநாள் மங்குவின் மனதில் அந்த ஆசை உண்டானது. எங்கேயாவது சில காலம் சென்று சுற்றிவிட்டு வர வேண்டும் என்பதே அந்த ஆசை. இதை தன் நண்பன் வெங்குவிடம் சொன்னது.

''வெங்கு எனக்கு இந்த காட்டிலே ரொம்ப காலமா இருந்து இருந்து என்னமோ போல இருக்கு. கொஞ்சகாலத்துக்கு பக்கத்து காட்டுக்கு போயிட்டு வரலாம்னு இருக்கேன். நீயும் கூட வந்தா எனக்கு சந்தோஷமா இருக்கும். வர்றியா?''

"என்னோட பிள்ளைகளை தனியே விட்டுட்டு உன்கூட வர முடியாது மங்கு. நீ மட்டும் போயிட்டு வாயேன்''

வெங்கு வர மறுக்கவே மங்கு மட்டும் அடுத்த காட்டிற்கு புறப்பட ஆயத்தமானது.

மங்குவிடம் ஒரு முத்துமாலை இருந்தது. அதை பத்திரமாக யாருக்கும் தெரியாமல் தன்னுடைய வீட்டில் வைத்து பாதுகாத்து வந்தது.

சில வருடங்களுக்கு முன்பு அந்த முத்துமாலை காட்டில் கீழே கிடந்தது. மங்கு அதை எடுத்துக் கொண்டு வந்தது. ஆசைப்படும் போதெல்லாம் தனது இடத்தில் அதை கழுத்தில் போட்டு மகிழும்.

அடுத்த காட்டிற்குச் சென்று திரும்பும் வரை அதை வெங்குவிடம் கொடுத்து பாதுகாக்கச் சொல்லிட்டுச் செல்ல எண்ணி அதை எடுத்துக் கொண்டு வெங்குவின் இருப்பிடத்திற்குச் சென்றது.

''வெங்கு இந்த முத்துமாலையை நான் திரும்ப வர்ற வரைக்கும் நீ பத்திரமா வெச்சுக்கோயேன் .நான் வந்ததும் உன்கிட்டே இருந்து வாங்கிக்கறேன்''

அந்த அழகான முத்துமாலையை வாங்கிப் பார்த்தது வெங்கு.

"ஆமா இந்து முத்துமாலையை நான் இதுவரைக்கும் பார்த்ததே இல்லையே. ஏது இது?''

"கொஞ்ச நாளைக்கு முன்னாலே இது எனக்கு கிடைச்சிது. சரி நான் புறப்படறேன். முத்துமாலையை பத்திரமா பார்த்துக்கோ''

''புது இடத்துக்குப் போறே. ஜாக்கிரதையா போயிட்டு வா''

வெங்கு மங்குவிற்கு கையசைத்து விடை கொடுத்தது. மங்கு புறப்பட்டுச் சென்றது. முத்துமாலையைப் பார்த்த வெங்குவின் மனைவி அதன் அழகில் மயங்கியது. "இந்த முத்துமாலை ரொம்ப நல்லா இருக்கே. ஏது இது?''

"இது என்னோட நண்பன் மங்குவுடையது. அவன் கொஞ்சக்காலம் பக்கத்து காட்டிலே இருந்துட்டு வரப் போயிருக்கான். திரும்பி வர்ற வரைக்கும் இதை பத்திரமா பார்த்துக்கச் சொல்லி என்கிட்டே குடுத்துட்டுப் போயிருக்கான்''

வெங்குவின் மனைவிக்கு அந்த முத்துமாலையை அணிந்து பார்க்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. "அந்த முத்து மாலையைக் கொஞ்சம் தாயேன். போட்டுப் பார்க்கணும் போல ஆசையா இருக்கு''

''சேச்சே இது நமக்குச் சொந்தமான பொருள் இல்லை. இதை மங்குவோட அனுமதியில்லாம நாம உபயோகிக்கக் கூடாது''



இந்த பேச்சு வெங்குவின் மனைவிக்கு ஏமாற்றத்தைத் தந்தது.

" மங்கு அண்ணன் உன்னோட நண்பன்தானே.ஒண்ணும் சொல்லாது''

" மங்கு ஒண்ணும் சொல்லாது. இருந்தாலும் நாம மங்குவோட அனுமதியில்லாம இதை உபயோகிக்கறது தப்பு''

வெங்குவின் மனைவி அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

அடுத்த நாள் அந்த இடத்திற்கு ஒரு பஞ்சவர்ணக்கிளி வந்தது. அதன்பெயர் பஞ்சு. அது வெங்கு வசித்த மரத்தில் ஒரு கிளையில் உட்கார்ந்தது.

அப்போது வெங்கு தன் மனைவி பிள்ளைகளுடன் வெளியே புறப்பட்டது.

'' ஏங்க மங்கு அண்ணன் குடுத்த முத்துமாலை உள்ளே இருக்கு. அது நாம வர்ற வரைக்கும் பத்திரமா இருக்குமா?''

''நம்ம வீட்டுக்குள்ளே முத்துமாலை இருக்கிற விடயம் நம்மைத்தவிர யாருக்கும் தெரியாது. பயப்படாதே''

இந்தக் பேச்சுக்கள் பஞ்சவர்ணக்கிளி பஞ்சுவின் காதில் விழுந்தன.

வெங்கு தன் குடும்பத்தினருடன் வெளியே புறப்பட்டுப் போனதும் பஞ்சு வெங்குவின் வீட்டிற்குள் சென்று அந்த முத்துமாலையை எடுத்தது. அந்த அழகிய முத்துமாலை அதற்கு மிகவும் பிடித்திருந்தது. அதை தன் கழுத்தில் போட்டுக் கொண்டு பறந்தது.

வெளியே சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பிய வெங்கு தனது வீட்டிலிருந்த முத்துமாலை காணாமல் போனதை அறிந்து அதிர்ச்சி அடைந்தது. மங்கு வந்து கேட்டால் என்ன சொல்லுவது என்று நினைத்து கவலைப்பட்டது.

வெங்கு அக்கம்பக்கத்தில் தேடியது. ஆனால், முத்துமாலை கிடைக்கவேயில்லை.

சிலகாலம் கழித்து மங்கு பக்கத்து காட்டிலிருந்து திரும்பி வந்தது.

வந்ததும் வராததுமாக மங்கு வெங்குவிடம் அந்த முத்துமாலையை திருப்பிக் கேட்டது.

" என்னை மன்னிச்சுடு மங்கு. அந்த முத்துமாலையை நான் பத்திரமாகத்தான் பார்த்துக்கிட்டிருந்தேன். ஒருநாள் எதிர்பாராதவிதமாக முத்துமாலை தொலைஞ்சு போச்சு''

இதைக்கேட்ட மங்குவிற்கு கடும்கோபம் வந்தது.

''நீ அதை திருடிக்கிட்டு என்கிட்டே தொலைஞ்சு போச்சுன்னு பொய் சொல்றே. நீ சொல்லதை நான் நம்ப மாட்டேன்''

''இல்லே மங்கு. நான் சொல்றது உண்மை''

"நீ இனி என்கூட பேசாதே. இன்னையோட நம்ம நட்பு முறிஞ்சி போச்சு. இவ்வளவு நாள் உன்கூட பழகினதுக்காக நான் வெட்கப்படறேன்''

மங்குவின் இந்தப் பேச்சு வெங்குவிற்கு வருத்தத்தை தந்தது.

அன்றிலிருந்து மங்கு வெங்குவிடம் பேசுவதில்லை.

தனது முத்துமாலை தொலைந்து போனதிலிருந்து மங்குவிற்கு மனது சரியில்லை. மீண்டும் பக்கத்து காட்டிற்குப் போய் சிறிது காலம் இருந்துவிட்டு வரலாம் என்று மங்கு புறப்பட்டு பக்கத்து காட்டிற்குச் சென்றது.

மங்குவின் முத்துமாலையை வெங்குவின் வீட்டிலிருந்து திருடிய பஞ்சவர்ணக்கிளி பஞ்சு, அந்தக் காட்டில் முத்து மாலையை தனது கழுத்தில் போட்டு அனைவரிடமும் காட்டி பெருமையடித்துக் கொண்டிருந்தது.


அப்போது மங்கு அந்த பஞ்சவர்ணக் கிளி பஞ்சுவைப் பார்த்தது. அதன் கழுத்திலிருந்த தனது முத்துமாலையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தது.

பஞ்சுவிடம் ஒரு மைனா அந்த முத்துமாலையைப் பற்றி விசாரித்தது.

"இந்த முத்துமாலை ரொம்ப நல்லா இருக்கே. ஏது இது?''

''பக்கத்து காட்டிலே ஒரு குரங்கு வீட்டிலே இருந்துச்சு. அங்கேயிருந்து எடுத்துக்கிட்டு வந்துட்டேன்''

''கேட்டு எடுத்துக்கிட்டு வந்தியா? இல்லே தெரியாம எடுத்துக்கிட்டு



வந்தியா?''

"கேட்டா யாராவது தருவாங்களா? அதான் அந்த குரங்குக்குத் தெரியாம எடுத்துக்கிட்டு வந்துட்டேன்''

"இது தப்பில்லையா?''

மைனா வருத்தத்துடன் கேட்டது.

''இந்த முத்துமாலை ரொம்ப நல்லாயிருக்கு. அதான் பொறாமையிலே ஏதேதோ பேசறே. முதல்ல நீ இங்கேயிருந்து போ''

மைனா அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டது. மங்கு உடனே பஞ்சுவிடம் வந்தது.

"இந்த முத்துமாலை என்னோடது. திருப்பித்தா''

முடியாதுபோ''

பஞ்சு அங்கேயிருந்து பறந்து சென்றது. மங்கு அதை முடிந்த மட்டும் துரத்தியது. ஆனால், மங்குவால் அதைப் பிடிக்க முடியவில்லை. வருத்தத்துடன் தனது காட்டிற்குத் திரும்பியது. நேராக வெங்குவின் வீட்டிற்குச் சென்றது.

"வா மங்கு. எப்படியிருக்கே?''

''என்னை மன்னிச்சிடு வெங்கு. இவ்வளவு நாள் உன்கூட பழகியும் உன்னோட நல்ல குணத்தை நான் புரிஞ்சிக்கலே. அந்த முத்துமாலையை ஒரு பஞ்சவர்ணக்கிளிதான் திருடிச்சு. எனக்கு இன்னைக்குத்தான் தெரிஞ்சிது. என்னை மறுபடியும் நண்பனா ஏத்துப்பியா?''

"நாம என்னைக்குமே நண்பர்கள் தான். உன்மேல எனக்கு எந்தக் கோபமும் இல்லே. வா நாம விளையாடலாம்''

வெங்குவும் மங்குவும் வழக்கம் போல விளையாட ஆரம்பித்தன.

# வடமாகாண கணிதப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட கணிதப் போட்டியில் வெற்றி பெற்றவர்களது பெயர் விபரங்களை வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது பெயர் விபரம் வருமாறு,

**தரம்-6**

**ஆங்கிலமொழி மூலம்**

எம். அன்ரனி றினோசன் ( மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), எஸ். துவாரகன் ( யா/யாழ். இந்துக் கல்லூரி), ஜி.ராமாஜினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி)

**சிங்கள மொழி மூலம்**

எஸ்.சம்யுலா (வவு/பரகும் ம.வி)

**தமிழ்மொழி மூலம்**

ஏ. சுபவர்சனா (மு/ வித்தியானந்தா கல்லூரி), எஸ். சர்மிகா ( வவு/ இறம்பைக்குளம் மகா வித்தி, ஆர்.துசாரகன் ( யா/ ஹாட்லிக் கல்லூரி)

**தரம் -7**

**ஆங்கில மொழி மூலம்**

கே. மாலன்பன் (யா/ஹாட்லிக் கல்லூரி), என். விதுசன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ஆர். யதுசன் (யா/ யாழ். இந்துக் கல்லூரி)

**சிங்களமொழிமூலம்**

எம். கிளரன்ஸ் யூட் ( வவு/ காமினி மகா வித்தியாலயம்)

**தமிழ்மொழி மூலம்**

எஸ். யதுர்சன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), ஆர். ஆதிரையன் ( யா/ யாழ். இந்துக் கல்லூரி), எஸ். ரிசோபிகா ( வவு/ இறம்பைக் குளம் மகா வித்தி

**தரம் -8**

**ஆங்கிலமொழி மூலம்**

எல்.ஸ்ரீஹர்சன் ( யா/ யாழ். இந்துக் கல்லூரி), எஸ். சஞ்சித் ( யா/ ஹாட்லிக் கல்லூரி), எஸ். தர்சா (வவு/ இறம்பைக்குளம் மகா வித்தி

**தமிழ்மொழி மூலம்**

எஸ். சிவதர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி), என். குமணன் (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஆர். ஸ்ரிலின்டினோசன் (யா/ யாழ். இந்துக் கல்லூரி)

**தரம்-9**

**ஆங்கிலமொழி மூலம்**

ஜே. ஜெகதாரணி (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ். சுபநிலா ( யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), ரி. பாசுபதன் (யா/ வீரசிங்கம் மத்திய கல்லூரி)

**தமிழ்மொழி மூலம்**

ரி. அபிஷேகா (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), என்.டிலாகேஸ்வரன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். மேரிநிதுசா (மன்/ சென்சேவியர் மகளிர் கல்லூரி)

**சிங்களமொழி மூலம்**

ஜே.ஏ. ருஜிரா (வவு/பரகும் ம.வி)

**தரம்-10**

**ஆங்கிலமொழி மூலம்**

ஆர். கீர்த்திகா ( யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), பி. துகாரகா (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தி

**தமிழ்மொழி மூலம்**

ஜி. கஜானன் ( யா/ யாழ். இந்துக் கல்லூரி), ஐ. சுபாகரன் ( யா/ யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.கார்த்திகா ( யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம் -11**

**ஆங்கிலமொழி மூலம்**

சர்வக்ஞன் (யா/யாழ். இந்துக் கல்லூரி), கே. மஹிந்தன் ( யா/ ஹாட்லிக் கல்லூரி), எல். விதுசா (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

**தமிழ்மொழி மூலம்**

வி. கோபிகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), எம். எச்.எம். நச்வி ( மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி),கே. மதனாகரன் (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

**சிங்களமொழிமூலம்**

சி. ஸ்ரீயாமலி (வவு/பரகும் ம.வி)

**கேத்திர கணித செயற்பாடுகள்**

ரி. கம்சா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜி. விசாலினி (யா/ இந்து மகளிர் கல்லூரி), இருவர் மூன்றாமிடம்:- கே. தச்சுதன், ரி. தனுசன் (வவு/கோவில் புளியங்குளம் மகா வித்தி


**கணித நாடகம்**

**மேல்பிரிவு**

வவுனியா புதுக்குளம் மகா வித்தி, யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, யா/ யாழ்ற்ரன் கல்லூரி

**கீழ்ப்பிரிவு**

மன்/ சின்னபண்டிவிரிச்சான் மகா வித்தி, யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, வவு/இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தி. (அ-7)



15 ஆவது ஆசிய கனிஷ்ட தடகளவிளையாட்டுப்போட்டியில் பங்கேற்பதற்காக வடமாகாணத்திலிருந்து இம்முறை மூவர் தெரிவு செய்யப்பட்டு கொழும்பு செல்லவுள்ளனர். இவர்கள் மூவரும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறியை நேற்றைய தினம் பத்தரமுல்லையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்ததைப் படத்தில் காணலாம். அருகில் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை நிற்பதையும் காணலாம். (படம் :- என்.குமார்)

# அதிர்ஷ்டம் தேடி அவுஸ்திரேலியா சென்ற இலங்கை அகதிகள்

## தமிழக முகாமில் வாழ்க்கை

இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் பல அகதி முகாம்களிலிருந்தும் சுமார் 123 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளாவின் கொல்லம் கரையோரப் பகுதியின் ஊடாக படகுமூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியா தப்பிச் சென்ற பலருக்கு ஒரே ஆண்டில் அவுஸ்திரேலியா குடியுரிமை கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதன் காரணமாகவே தாமும் இவ்வாறு படகு மூலம் பயணம் செய்ய தீர்மானித்ததாகவும் புகலிடக்கோரிக்கையாளர்கள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர்.

படகுப் பயணத்தில் காணப்படும் பேராபத்துக்களை தாம் நன்கு அறிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். அதிர்ஷ்டம் இருந்தால் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 151 இலங்கைப் புகலிடக்கோரிக்கையாளர்கள் கேரள கடற்கரையில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கொடிவாரத்தில் வாரி வழங்குங்கள்

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு வலுவிழந்தோர் புனர்வாழ்வு கொடிவாரம் இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஒரு வார காலத்திற்கு இக்கொடி வாரம் நடைபெறுமென நிறுவன தலைவர் வைத்தியர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தெரிவீத்துள்ளார்.

இந்நிறுவனமானது யுத்தத்தின் கொடூரத்தாலும் நோயின் காரணமாகவும் அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்தி அவர்களை மாற்றுவலுவுள்ளோராக மாற்றும் மனித நேயப் பணியினை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

எனவே இக்கொடி வாரத்தினை சிறப்பிக்கும் முகமாக தங்களை நாடி வருவோருக்கு மனமுவந்து போதியளவு நிதியினை வழங்குவதன் மூலம் வலுவிழந்தோர் இயல்பு வாழ்வு வாழ வழி வகுக்கும் என குறிப்பிட் டுள்ளது. (அ-2-7)

# வவுனியா தெற்கு கல்விப்பணிமனைக்கு எதிராக ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம்



(பூந்தோட்டம்)

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் அதிபரும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை பொருளாளருமான நேசராசா மீது பாடசாலை மாணவர்களைக்கொண்டு தாக்குதல் நடத்தியமை மற்றும் பாடசாலை மாணவர்களை சுற்றுநிருபத்திற்கு எதிராக இடைவிலத்தியமை தொடர்பாக கோமரசன்குளம் மகா வித்தியாலய அதிபர் மீது வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனை நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கம் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இவ்வார்ப்பாட்டம் நேற்று முன்தினம் பிற்கல் 2 மணியளவில் நடைபெற்றது. இதன் போது கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்,

வலயக்கல்வி அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அதிபர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் பாடசாலை அதிபர் அதே பாடசாலையில் கடமையில் ஈடுபட்டிருக்கும் நிலையில் மாணவர்கள் மீது விசாரணைகளை மேற்கொள்வதில் அர்த்தமில்லை எனவும் தெரிவித்தார்.

உண்மையான விசாரணையை கல்வித் திணைக்களம் நடத்துவதாக இருந்தால் குற்றம் சாட்டப்பட்ட அதிபரை பதவியில் இருந்து அகற்றியிருக்க வேண்டும். இல்லையேல் வேறு பாடசாலைக்கு மாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு எதனையும் செய்யாது விசாரணை மேற்கொள்வது எவ்விதமான நடவடிக்கையும் இடம்பெறாது என்பதே அர்த்தமாகும்.

இதேநேரம் வட மாகாண கல்வி அமைச்சு வேறு ஒரு அதிபராக இருந்தால் என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும். ஆனால் இந்த அதிபர் மீது ஏன் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இந்த அதிபர் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் இருந்தும் நடவடிக்கை எடுக்காதது இந்த அதிபரை பாதுகாப்பதற்கேயாகும். எனவே நீதியான விசாரணைகளை மேற்கொள்ளாவிட்டால் இலங்கை ஆசிரியர் சங்கம் போராட்டத்தை விரிபுபடுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இதன்போது அதிபரை தாக்கும் அதிகாரத்தை வழங்கியது யார்? கல்வி நிர்வாகமே வன்முறையை ஊக்குவிக்காதே, சிறுவர் துஷ்பிரயோகத்தை உடன் நிறுத்து,அதிகார துஷ்பிரயோகத்தை உடன் நிறுத்து, அடாவடித்தன அதிபர்கள் எங்களுக்கு வேண்டாம் எனப் பல கோசங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தவர்களால் எழுப்பட்டது. இவ்வார்ப்பாட்டத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-2-266)

# கரப்பந்தாட்டப்போட்டி

பருத்தித்துறை வை. எம்.சி.ஏ. நிறுவனத்தினால் வடமராட்சிக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் உரிய நேரத்திற்கு சமுகமளித்து போட்டியில் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்

## த கார்டியன் செய்தித்தாள் விபரிப்பு

(லண்டன்)

பிரித்தானியாவிலிருந்து கடந்த வருடம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அகதி ஒருவர் இலங்கை அரசின் கோரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக த கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரிய இலங்கை அக்திகளை நாடுகடத்துவதில் பிரித்தானியா மும்முரமாக செயற்படுகின்றது. கடந்த வாரமும் 40 பேர் வரையிலானோர் நாடு கடத்தப்பட்டனர்.

பிரித்தானியா வந்துள்ள இலங்கை ஜனாதிபதியை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் காலநிலையையும் பொருட்படுத்தா து தம் இனத்துக்கு நடந்த இனப்படு கொலையையும் நடந்து கொண்டிருக்கின்ற சித்திரவதைகளையும் எண்ணத்தில் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

மஹிந்த லண்டன் [illegible] இந்நிலையில் பிரித்தானிய பத்திரிகையான த கார்டியன் பத்திரிகையிலும் மஹிந்த அரசு மேற்கொண்டுள்ள சித்திரவதைகளை அம்பலத்துக்கு கொண்டு வந்தும் பிரித்தானிய அரசு மௌனம் சாதிப்பது வியப்புக்குரிய விடயமே. இனிமேலாவது பிரித்தானிய அரசு தமிழர் உரிமைகள் மீது அக்கறை கொள்ளுமா? என கேள்வியெழுப்பியுள்ளது.

(அ-2)

# முல்லைத்தீவு மக்களுக்கு இழப்பீட்டு காசோலை

## நாளை அமைச்சர் கஜதீர வழங்குவார்

(முல்லைத்தீவு)

புனர்வாழ்வு அதிகார சபையினரால் வீட்டு மானியம் மற்றும் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, கரைதுறைப்பற்று, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கே வழங்கப்படவுள்ளது.

இதில் வீட்டுச் சேதம், உயிர்ச் சேதம், பொருட்சேதம் உடையவர்களுக்கு அரச இழப்பீடு காசோலையாக வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பின் செயலாளர் ஏ.திசாநாயக்க, புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் இ.ஏ.சமரசிங்க, புனர்வாழ்வு அதிகார சபையின் பணிப்பாளர் வி.உசைன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்ட 199 பேருக்கு வீட்டு மானியம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் அரச ஊழியர்கள் 19 பேருக்கும் அரச ஊழியர்களில் இறந்த மற்றும் காயப்பட்டவர்கள் 6 பேருக்கும் நஷ்ட ஈடுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேலும் 28 பொது மக்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதுடன் இறந்த, காயப்பட்டவர்கள் 50 பேருக்கும் நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளது.

எனவே, அறிவிக்கப்பட்ட பயனாளிகளை கலந்து கொள்ளுமாறு முல்லை. மாவட்ட செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

(அ-3-267).

# களை நாசினிகளால் நன்மை கிடைக்கவில்லை

## விவசாயிகள் கவலை

(மல்லாவி)

கோரைப்புல்லுக்குரிய களை நாசினியை பலமுறை விசிறிய போதும் பயன் எதுவும் கிடைக்கவில்லை என வன்னி மாவட்ட கமக்கார அமைப்பினரும் விவசாயிகளும் தமது கோரிக்கையை கமநல சேவை சார்ந்த அதிகாரிகளுக்கும் முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுக்கும் ஏனைய அரச அதிபர்களுக்கும் மகஜர் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது, கோரைப்புல்லுக்குரிய களை நாசினியை உற்பத்தி செய்து வன்னி பெருநிலப்பரப்பில் விநியோகம் செய்துள்ள பல மருந்து கம்பனிகளின் மருந்துகளே இவ்வாறு பயனற்று உள்ளன.

குறிப்பாக துணுக்காய், பாண்டியன்குளம் விவசாயிகள் நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களில் பல ஆயிரக்கணக்கானவர்கள் இம் மருந்துகளை பலமுறை விசிறிய பொழுதும் பலன் எதுவும் இன்றி பல இலட்சம் ரூபாய்களை வீணாக இழந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அரச, அரச சார்பற்ற வங்கிகளில் வட்டிக்கு பணம் எடுத்து விவசாயம் செய்த இம் மக்கள் பெரும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து தரமான மருந்துகளை பெற்றுத் தருவதோடு தங்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தையும் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்யுமாறும் அம்மகஜரில் குறிப்பிட்டிருந்தனர்.

(அ-3-15)

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## நிதி குத்தகைக்குவிடும் தொழிலை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள்

**2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதிகாரப் பதிவு சான்றிதழின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்கள் தவிர வேறு எந்தவொரு ஆளும் நிதி குத்தகைக்குவிடும் தொழிலை மேற்கொள்ளக்கூடாது** என பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்களின் பெயர்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. பெயர்கள் 2012.06.01 இல் உள்ளவாறு தமிழ் அகரவரிசைப்படி தரப்பட்டுள்ளன.

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவை)

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இலங்கை வங்கி
4. எம்சிபி பாங்க் லிமிடெட்
5. கொமர்சல் பாங்க் ஓவ் சிலோன் பிஎல்சி
6. சம்பத் பாங்க் பிஎல்சி
7. செலான் பாங்க் பிஎல்சி
8. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
9. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
10. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
11. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
12. மக்கள் வங்கி
13. யூனியன் பாங்க் ஓவ் கொழும்பு பிஎல்சி

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவை)

14. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
15. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
16. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
17. டிஎவ்சீசீ பாங்க்
18. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
19. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் (2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவை)

20. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
21. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
23. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
24. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
25. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
26. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
27. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் பிஎல்சி
28. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
29. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
30. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
31. கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
32. கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
33. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
34. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
35. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
36. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
37. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
38. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
40. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
41. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
42. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
43. த பினான்ஸ் அன்ட் கரன்டி கம்பனி லிமிடெட்
44. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
45. த ஸ்ராண்டட் கிறடிற் லங்கா லிமிடெட்
46. திவச பினான்ஸ் லிமிடெட்
47. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
48. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
49. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
50. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
51. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
52. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
53. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
54. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
55. மர்ச்சன்ட் கிறடிற் ஓப் சிறிலங்கா லிமிடெட்
56. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
57. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
58. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி

### சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் (2007ஆம் ஆண்டின் 7 இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவை)

59. அசற்லையின் லீசிங் கம்பனி லிமிடெட்
60. இசுறு பினான்ஸ் கம்பனி லிமிடெட்
61. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
62. எல்ஓஎல்சி மைக்றோ கிறேடிட் லிமிடெட்
63. எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி
64. ஓரியன்ட் பினான்சியல் சேர்விஸஸ் கோப்பிரேசன் லிமிடெட்
65. சம்பத் லீசிங் அன்ட் பக்ரறிங் லிமிடெட்
66. சிலீஸ் லிமிடெட்
67. சொவ்ற்லொஜிக் கிறேடிற் லிமிடெட்
68. கொஷிபா லீசிங் கம்பனி லிமிடெட்
69. கோப்பறேிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
70. பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி
71. மேர்ச்சன்ட் பாங்க் ஓவ் சிறிலங்கா பிஎல்சி
72. லிஸ்வின் இன்வெஸ்மென்ற்ஸ் லிமிடெட்

**இலங்கை மத்திய வங்கி**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01. தொ.பேசி : 011 2477500, 011 2477555, 011 2477020 தொ.நகல்: 011 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(சி/180)

மனிதனின் பெருமையும் சிறுமையும் அவனவன் இதயத்துக்குள் இருக்கின்றன.

*-சீனப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்.போதனா வைத்தியசாலையில் அலையும் ஆத்மாவின் ஆதங்கம் இது

அன்புக்குரிய மருத்துவர்களே! இந்தப் பூமியில் வாழவிரும்பிய எனக்கு அது சாத்தியமற்று போயிற்று. என் செய்வது? என் ஏழ்மையே அதற்குக் காரணம் என்று என்னால் உணர முடிகிறது.

நீ ஏழையாக பிறந்தால் அது உன் தவறல்ல; ஆனால் நீ ஏழையாக இறந்தால் அது உன் தவறு என்று ஒரு கவிஞன் கூறிய வரிகளை நினைத்துப் பார்க்கிறேன்.

இருப்பினும் அந்தக் கவிஞனின் கற்பனைக்கு அப்பால் எங்கள் நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், நாட்டின் சமத்துவமற்ற ஆட்சி அதிகாரங்கள், ஏழ்மையிலிருந்து ஏழைகளுக்கு விடுதலை கொடுக்க மறுத்து விடுகின்றன என்ற நிஜங்களையும் மறுதலிப்பதற்கில்லை.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆத்மாவாக அலையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது,

உங்களில் எத்தனையோ அற்புதமான மருத்துவர்கள் இருக்கிறீர்கள். கடமை உணர்வுமிக்கவர்கள் இருக்கிறீர்கள்.

அதேபோல் உங்களில் பலரின் சேவையால் தான் யாழ்பாணப் போதனா வைத்தியசாலையில் உயிர் காப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இருந்தும் என் இழப்பு என் குடும்பத்தை நிர்க்கதியாக்கி விடுகின்றதல்லவா?

காப்பாற்ற முடியவில்லை என்ற நிலைமை கடும் முயற்சிகளுக்கு அப்பால் ஏற்பட்டதாக இருந்தால், அதனைத் தாராளமாக ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால்; வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பல மணிநேரமாகப் பெரிய ஜயா பார்க்காமல்– நோயை இனங்காணாமல்– சிகிச்சையை ஆரம்பிக்காமல் செத்துப் போனவனின் நிலைமையை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

வைத்தியர்கள் வசதியோடு வாழ வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. அதே நேரம் உங்கள் தந்தை ஒரு மருத்துவராக இருந்துதான் உங்களை மருத்துவனாக்கினாரா? என்றால் அது தான் இல்லை.

ஒரு சாதாரண விவசாயியின் பிள்ளை உலகப் புகழ்பெற்ற மருத்துவ நிபுணராக ஆகியிருக்கிறார். அதேநேரம் அவரின் பிள்ளையால் மருத்துவனாக வர முடியவில்லை. அப்படியானால் இங்கு சிறந்த தந்தை யார்?

எனவே அன்புக்குரிய மருத்துவர்களே! மருத்துவ நிபுணர்களே! நீங்கள் பூர்வபுண்ணியம் செய்தவர்கள். உங்களுக்கு தெய்வ அனுக்கிரகம் நிறையவே உண்டு.

அதில் ஒரு பகுதியை கடமைக்கும் ஏழைகளுக்குமாக ஒதுக்குங்கள். நிச்சயம் உங்களால் ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க முடியும்.

உங்கள் பணி தூய்மையானதாக இருக்கும் போது இறைவன் நிச்சயம் உங்களை இரட்சிப்பார்.

இதோ! எனக்கும் சொர்க்கலோகம் காத்திருக்கிறது. என் ஆதங்கத்தை கனவுவழியாகக் கூறிவிட்டேன்.

அதோ கூத்தபிரானின் திருவடியில் பொற்றாளத்து ஓசை கேட்கின்றது. நானும் அங்கு செல்கிறேன்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நடமாடிய அந்த ஆத்மா பறந்து செல்கிறது. அதன் வேகத்தில், வெளிச்சத்தில் திடுக்குற்றெழுந்தேன்.

(இஃது முற்றும்)

## இந்து ஆலயங்களில் இடம்பெற்றுவந்த திருட்டுக்களை கட்டுப்படுத்தியுள்ளனராம்

### பொலிஸ் தரப்பு கூறுகிறது

இந்து ஆலயங்களை மையப்படுத்தி இடம்பெற்றுவந்த திருட்டுச் சம்பவங்களைபூரணகட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் கடந்த வருடமும் அதற்கு முந்திய காலங்களிலும் பரவலாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தன. குறிப்பாக இந்து ஆலயங்களில் பாரிய கொள்ளைச் சம்பவங்களும் திருட்டுக்களும் இடம்பெற்று வந்தன.

பலரது வேண்டுகோளுக்கு அமைவாக பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் இந்து ஆலயங்களை மையப்படுத்திய திருட்டுக்களும் பாரிய கொள்ளைச் சம்பவங்களும் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இரவுநேர ரோந்துப் பணியிலும் வீதிச் சோதனை நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டு வந்ததோடு பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதன் காரணத்தினால் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்தோடு கடந்த காலங்களில் கொள்ளைச் சம்பவங்களும் திருட்டுக்களும் இடம்பெற்றது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு பலரைக் கைது செய்து விசாரணைக்கும் உட்படுத்தி வருகின்றோம்.

இந்து ஆலயங்களில் உரிய பாதுகாப்புக்கள் மேற்கொள்ளப்படாமையே இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற முக்கிய காரணம். இரவு நேரங்களில் காவலாளிகள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போது தான் இவ்வாறான திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தமுடியும் என்றார்.

இதேவேளை யாழ்.வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் தேவஸ்தானத்திலிருந்த மரத்தினாலான வாகனங்கள் இரண்டு கடந்த 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலைவேளை திருடப்பட்டிருந்தது.

பொலிஸார்– இராணுவத்தினர் எந்நேரமும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பகுதியிலிருந்து இடபம், குதிரை வாகனங்கள் இரண்டு திருடப்பட்டிருந்தது மக்கள் மத்தியில் சந்தேகத்தினையும் அதிர்ச்சியினையும் ஏற்படுத்தியிருந்தது.

சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த இரண்டு வாகனங்களும் திருட்டுப்போயுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## பாவனையாளர் அதிகாரசபையின் சட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும்

### பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்கள்உரியமுறையில்விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி என்.சிவசீலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்திற்கு அமைவாக வர்த்தகத்தில் ஈடுபடும் போது நுகர்வோரினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களைக் கட்டுப்படுத்தமுடியும்.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், நிர்ணயித்த விலையிலும் பார்க்க பொருட்களின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்தல், விலைப்பட்டியலை உரிய முறையில் காட்சிப்படுத்தாமல் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற குற்றச்சாட்டின்பேரில் நாளாந்தம் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இருப்பினும் தொடர்ந்து சில வர்த்தகர்கள் சட்டத்திற்கு முரணான முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நுகர்வோருக்குப்பாதிப்பு ஏற்படும் வகையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

மேலும் சட்டத்திற்கு முரணாக வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதனால் நீதிமன்றங்களுக்கு அபராதம் செலுத்த வேண்டியுள்ளதோடு அவமானப்பட வேண்டிய நிலையும் வர்த்தகர்களுக்கு ஏற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. அந்தவகையில் பிதா நாம் காணும் தெய்வம். இறைவனையும் தந்தையாக எண்ணி வணங்கும் மெய்யடியார்கள் உளர். தாயும் நீயே தந்தையும் நீயே எனச் சம்பந்தர் பாடியுள்ளார். மணிவாசகர் இறைவனை எந்தையேயென விளித்துப் பல பாடல்கள் ஆக்கியுள்ளார். ஒருவனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடன் எனச் சங்க இலக்கியம் கூறுகிறது. தந்தை சொல் மிக்க மந்திரமும் இல்லை என்ற கூற்றும் உண்டு. எனவே தந்தையாக இறைவனைப் பாவனை செய்து பாடல் பாடுவதும் வழக்கமாக அமைந்தது.

இறைவனைத்தந்தையாகக்காணும் மணிவாசகர் இறைவன் பேராற்றலைகளைப் பாடியுள்ளார். எந்தையே! என்னுடைய மனம் நின்னை நினைந்து அறிவதற்காகத் தன்னுடைய ஆற்றலின் எல்லை வரைக்கும் மேற்பட்டுச் செல்லும். ஆனால் நீ மனோதீதனாதலால் நின் ஆற்றலை அறிய மனத்தால் முடியாது. ஏமது வாக்கினாலே சொல்லக்கூடியவை கல்வி கேள்விகளால் அறியப்படுபவை மட்டுமே. வாக்கிற்கு நின்னைப் பற்றிச் சொல்வதற்கு தினையளவுகூட முடியாது. அடுத்து எல்லாவுலகங்களிலும் உடனாயும் வேறாயும் அமைந்த நின்னை ஐம்புலன்களும் காணும் ஆற்றலுடையனவல்ல என அவர் பாடலில் குறிப்பிடப்பட்டிருந்தது உலக வாழ்வின் பலவீனத்தை எடுத்துரைப்பதாக உளது.

எனவே இறைவனிடம் நேரில் கேட்க முற்படுகிறார். மனம், மொழி, மெய் என்னும் மூன்றினாலும் வழிபட்டு இறைவனை அடையலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. ஐம்புலன்களான சுவை, ஒளி, ஊறு,ஓசை, நாற்றம் என்பவற்றை உணரும் பொறிகளாலும் இறைவனை உணரமுடியாது. இறைவன் தானே வலிய வந்து தன்னைக்காட்ட வேண்டும். இது கைகூடுவதற்கு அல்லும் பகலும் இறைவன் பாதங்களைப் பணிந்து வணங்கவேண்டும். அதற்காகப் பாதங்களைப் பற்றி வினவுகிறார். நின்னுடைய திருவடியை அடைவதற்கு அது எத்தன்மைகளையுடையது. எவ்விடத்தில் உள்ளது என்பதை அறியாமலிருக்கிறேன். ஆதலால் அத்திருவடிகளைச் சென்று நான் அடைவதற்கு அருள் செய்யவேண்டுகிறார்.

திருவடித்தீட்சை பெற்ற மணிவாசகர் இவ்வாறு மீண்டும் கேட்பது சற்று முரண்பாடாகத் தோன்றுகிறது. இறைவன் வலிய வந்து திருவடித்தீட்சை செய்த பெரும் பேற்றைப் பெற்ற மணிவாசகர் அதனை மறந்து மீண்டும் உலகியல் வாழ்வில் ஈடுபட்டிருந்தார். அதனால் தான் பெற்றிருந்த மெய்ஞ்ஞான அறிவை இழந்துவிட்டார். இப்போது இழந்ததைப் பெறும் முயற்சியிலீடுபட்டுப் பாடல்கள் பாடுகிறார். அவருடைய நினைப்பின் வலுவின்மையை முதலில் குறிப்பிடுகிறார்.

இறைவன் பற்றிய சிந்தனை எப்போதும் இடைவிடாத சிந்தனையாக இருக்க வேண்டும். சொல்லாலும் எடுத்துரைக்க முடியாமலுள்ளது. எனவே மீண்டும் ஒருமுறை தீட்சை பெறத் திருவடியைத் தேடுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

உலக வாழ்வியலின் கவர்ச்சி இறை வாழ்வியலுக்குப் பெரிதும் தடையாகவுள்ளதையே மணிவாசகர் உணர்த்த முயல்கிறார். அவர் தன்னுடைய இயலாமையை இறைவனுக்கும் எடுத்துரைக்கும் பாங்கு வேறுபட்டது. தினையளவுகூடத் தனக்கு ஆற்றல் இல்லையெனத் தெளிவாகக்கூறியுள்ளார். இது எமக்கும் பொருந்தும். எனினும் இறைவழிபாடு செய்யும்போது திருவடியை வழிபடுவதே நற்பலன் தருமென்பதை நன்கு உணர்த்திச் சென்றுள்ளார்.

நினைப்பதாக சிந்தை செல்லும்
எல்லையேய வாக்கினால்
தினைத்தனையு மாவதில்லை சொல்ல
லாவ கேட்பவே
அனைத்து லகு மாய நின்னை
ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்புறத்த
தெந்தை பாதம் எய்தவே

# கொக்கிளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புமாறு மக்கள் கோரிக்கை

## கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி பணிப்பாளரிடம் மகஜர் கையளிப்பு

**(புதுக்குடியிருப்பு)**

**முல்லைத்தீவு கொக்கிளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறும் இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றுமாறும் வலியுறுத்தி பெற்றோர்களினால் கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் நேற்று முன்தினம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.**

யுத்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இப் பாடசாலையின் செயற்பாடுகள் கடந்த வருடம் 3 ஆம் மாதம் 15 திகதி மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தரம் ஒன்று முதல் 11 வரையான வகுப்புக்களில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றபோதும் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு ஆங்கிலம், சங்கீதம், நடனம் ஆகிய மூன்று பாடங்கள் மட்டுமே கற்பிக்கப்பட்டு வருகின்றன.

கணிதம், தமிழ், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற பாடங்களுக்கு இதுவரை ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

அத்தோடு கழிவறை வசதிகள், குடிநீர் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருணாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 146 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் இக்கிராமங்களில் 57 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் ஒன்றாக முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு நேற்று முன்தினம் சென்றுள்ளனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் இல்லாததனால் கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சேய் சோதிகாந்தனிடம் மகஜரை கையளித்தனர்.

அத்தோடு முற்பகல் 11.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரையான ஒரு மணி நேரம் பொதுமக்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளனர். கோரிக்கைகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதாக கோட்டக்கல்வி அதிகாரி வாக்குறுதியளித்துள்ளார்.

இருப்பினும் குறுகிய காலத்திற்குள் தமது கோரிக்கைகள் தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறினால் ஆர்ப்பாட்டங்களிலும் உண்ணாவிரதப் பேராட்டதிலும் ஈடுபடப்போவதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (அ-6-267)

## துரித கற்றல் செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட ஆரம்பக்கல்வி பாடசாலைகளில் தரம் 1,2 இற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான துரித கற்றல் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு உரிய ஆசிரியர்கள் மாணவர் தொடர்பான தரவுகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் கு.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

(அ-3-15)

## இளையோருக்கான தொழிற்பயிற்சிகள்

இளைஞர் விவகார அமைச்சின் கீழுள்ள தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினரால் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியானது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 16 வயது தொடக்கம் 36 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இதில் வானொலி, திருத்துதல் தொலைக்காட்சி திருத்துதல் ஆகிய பயிற்சிகள் இலவசமாக 18 மாதங்கள் நடத்தப்படவுள்ளது.

பயிற்சிகள் 6 மாதங்கள் வகுப்பறை செயற்பாட்டுடனும் 12 மாதங்கள் வெளிக்கள பயிற்சி நெறியுடனும் நடைபெறும். பயிற்சி நிறைவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுடன் தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்தி கொடுக்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கு சில வெற்றிடங்கள் உள்ளதால் மேற்கூறப்பட்ட தகைமையுடையவர்கள் முகாமையாளர், தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, ஏ9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரியுடனோ அல்லது 034 394 2824 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு இத்திட்டத்தின் முகாமையாளர் ஏ.பி.அல்பிரட் அறிவித்துள்ளார். (அ-3-15)

# கோம்பாவில் பிரதேசத்தில் குடியேற்றப்பட்ட மக்கள் சொந்த இடங்களுக்கு அனுமதிக்கப்படுவர்

## பாதுகாப்பு செயலாளர் உறுதியளிப்பு

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் இராஜதந்திரிகளுக்கும் இடையில் உயர்மட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர்மட்ட பிரதிநிதிகளினால் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாதுகாப்புச் செயலாளரும் பாதுகாப்புப்படை உயரதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதாகவும் இதில் நிலக்கண்ணி வெடி அகற்றல், இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றம் மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

மெனிக்பாம் முகாமில் சுமார் 6 ஆயிரம் இடம்பெயர் மக்கள் வாழ்ந்து வருவதாவும் இவர்களில் 5 ஆயிரத்து 500 பேர் ஜூலை மாத இறுதிக்குள் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படவுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வரையில் உதவிகளை வழங்க முடியாது என உதவி வழங்கும் நாடுகள் அறிவித்துள்ளதனைத் தொடர்ந்து இந்த விசேட சந்திப்பு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புச் செயலாளர் இராஜதந்திரிகளுக்கு விளக்கியுள்ளார். கோம்பாவில் பகுதியில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் தங்குவதற்கும் அனுமதியளிக்கப்படும் என அவர் குறிப் பிட்டுள்ளார். ஆயினும் கோம்பாவில் பகுதியில் மக்கள் பலவந்தமாக மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒட்டாவா நிலக்கண்ணி வெடி தொடர்பான பிரகடனத்தில் கைச்சாத்திட இலங்கை தயார் எனவும் அவர் தெரிவித்தார். (அ-7)

# பல்துறை வினாடிவினா போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற வட மாகாண பல்துறை வினாடி வினாப் போட்டியில் வவுனியா தெற்கு வலய அணிகள் கனிஷ்ட பிரிவில் முதலாமிடத்தினையும் சிரேஷ்ட பிரிவில் மூன்றாமிடத்தினையும் பெற்று மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கனிஷ்ட பிரிவுக்கான இறுதிப் போட்டியில் வவுனியா தெற்கு வலய அணியை எதிர்த்து தென்மராட்சி வலய அணி போட்டியிட்டது. இப்போட்டியில் தென்மராட்சி வலய அணி 85 புள்ளிகள்ளயும் வவுனியா தெற்கு அணி 95 புள்ளிகளையும் பெற்று வெற்றியீட்டியது. இப்போட்டியில் வலிகாமம் அணி மூன்றாமிடத்தினை பெற்றுக் கொண்டுள்ளது.

சிரேஷ்ட பிரிவிற்கான போட்டியில் யாழ்ப்பாண வலய அணியினை எதிர்த்து வடமராட்சி வலய அணி போட்டியிட்டிருந்தது. இதன்போது முதலாமிடத்தினை யாழ்ப்பாண அணியும் இரண்டாமிடத்தினை வடமராட்சி அணியும் மூன்றாமிடத்தினை வவுனியா தெற்கு வலய அணியும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டியில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-9-266)


**Advanced Technological Institute, Jaffna**

**Invitation for Tenders**
**Security Service**

Sealed Tenders are invited by Advanced Technological Institute, Jaffna from eligible service providers for Security Service for the institute. The service will be consisting of two shifts including day and night shifts. (Details are attached below)

Day shift - One (01) Male & one (01) Female
Night shift - Two (02) Males
Public Holiday - Day & Night shift Males

Eligible bidders may obtain the tender application form the office from 05/06/2012 to 25/06/2012 during working days between 9.00am and 3.00pm on payment of Rs.500/= (Nonrefundable) and Rs.3000/= (refundable)

Completed tenders should be forwarded to "Director, Advanced Technological Institute, 665/2, Beach Road, Gurunagar, Jaffna" with the title of "Tenders for security Service" on the top left hand corner of the envelop, on or before 26/06/2012.

Tenders will be opened on 27/06/2012. Wednesday at 3.00pm at 'Advanced Technological Institute, Jaffna in presence of the tenders' representatives who choose to attend in person.

The Tender Board of Advanced Technological Institute, Jaffna has the right to accept any offer or to refuse all offers and to take decisions regarding offers.

(C-179)

Director,
Advanced Technological Institute,
Jaffna.

# பாகிஸ்தான் 6 விக்கெட்டால் இலங்கையை வீழ்த்தியது

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தற்போது இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இவ்விரு அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரில்இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றதால் தொடர் சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் இரு அணிகளும் மோதும் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நேற்று தொடங்கியது. பல்லேகலவில் பகல்-இரவு ஆட்டமாக நேற்று நடைபெற்ற முதல் ஒரு நாள் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் ஜெயவர்த்தன தனது அணி முதலில் துடுப்பாட்டம் செய்யும் என அறிவித்தார்.

அதன்படி ஜெயவர்த்தனவும் டில்சானும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். ஆட்டம் தொடங்கிய முதலே பாகிஸ்தான் அணியினரின் சிறப்பான பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறிய இலங்கை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 3 ஓட்டங்களும், திலகரட்ண டில்சான் 5 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய குமார் சங்கக்கார 9 ஓட்டங்களும், சண்டிமால், அஞ்சலோ மத்யூஸ் இருவரும் ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்டமிழந்தனர்.

பின்பு களமிறங்கிய உபுல் தரங்க 10 ஓட்டங்களும், திசார பெரேரா 17 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின் மழை குறுக்கிட்டதால் ஓவரின் எண்ணிக்கை 42 ஆக குறைக்கப்பட்டது. முடிபில் இலங்கை அணி 8 விக்கெட் இழப்பிற்கு 135 ஓட்டங்கள் எடுத்தது.

அதன் பின் களமிறங்கிய பாகிஸ்தான் அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 135 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடியது.

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக முகமட் ஹபீஸ், அசார் அலி ஆகியோர் களமிறங்கினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 11 ஆக இருந்த போது அசார் அலி 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹபீஸுடன் ஜோடி சேர்ந்த யூனிஸ் கான் 5 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ஹபீஸுடன் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெதுவாக உயர்த்தினர்.

இவர்கள் இருவரும் 3 வது விக்கெட்டுக்காக 51 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பெற்றபோது ஹபீஸ் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய உமர் அக்மல் அணித் தலைவர் மிஸ்பாவுடன் சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியவேளை, அணி 133 ஓட்டங்களை எடுத்திருந்த போது அணித்தலைவர் மிஸ்பா 30 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்ட




மிழந்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 34.1 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. அக்மல் 36 ஓட்டங்களுடனும் அப்ரிடி 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக உமர் குல் தெரிவானார்.

## கூட்டமைப்பு இல்லாத...

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமது கட்சி பங்குபெற வேண்டுமானால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளக் கூடிய ஒரு சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.தே.கவின் தலைவர் கடந்த நாடாளு மன்றத் கூட்டத்தில் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு இதுவரை அரச தரப்பிலிருந்து எந்த பதிலும்இல்லைஎன்பதாலேயேஇந்தமுடிவுஎடுக்கப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும், அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்த பேச்சுவார்த் தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ரணில் தெரிவித்த கருத்துக்களுக்கு அரசு இணங்கினால்எமது கட்சி இந்த குழுவில் இடம்பெறலாம்.

ஆனால் அரச தரப்பு இதுவரை இது தொடர்பில் நேரடியான ஒரு பதிலை வழங்கவில்லை.

அப்படியான ஒரு பதிலை அரசாங்கம் வழங்கும்வரை தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி பங்குபெறுவது குறித்த முடிபை எடுக்க முடியாது என்று கட்சி தீர்மானித்துள்ளது.

அந்தக் குழுவில் பங்கு பெறுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் இதுவரை எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்யாமல் அரசியல் செய்கிறது என்று கூறப்படும் விமர்சனங்களும் நியாயமற்ற வை.

பல ஆண்டுகளாக நீடித்திருக்கும் இனப்பிரச்சினைக்கு முடிபு காண அரசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் முன்வைக்கும் எந்த ஒரு தீர்வுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி தடையாக இருக்காது என்பதையும் தமது கட்சி பகிரங்கமாகவே தெரிவித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தர். (எ-11)

## பொன்சேகா...

இதன்மூலம் தனக்கு எதிரான சக்திகள் தொடர்ந்தும் அதேவழியில் செயல்படுவ தைக் காணக்கூடியதாக இருப்பதாக விசார ணையின் பின்னர் பேசிய பொன்சேகா கூறியுள்ளார்.

மக்களின் ஆதரவுடன் இவ்வாறான தீய சக்திகளுக்கு எதிராக போராடி அவற்றை தான் தோற்கடிக்கப்போவதாகவும் அவர் கூறினார். (எ-11)

## மாணவர்களுக்கு...

முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

910 பாடசாலைகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 75ஆயிரம் மாணவர்கள் இதனால் பயன் பெறுகின்றனர். கடந்த 2003-ம் ஆண்டிலிருந்து இவ் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.

சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சமையல் அறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சமையல் தொண்டர்களுக்கு உலர் உணவு வழங்கப்படுகின்றது. அத்துடன் பச்சை மரக்கறிகளுக்காக மாணவர் தொகைக்கேற்ப ரூபாய் 2.50 தொடக்கம் ரூபாய் 4.50 வரை நாளாந்தம் வழங்கப்படுகின்றது.

தற்பொழுது சவுதி அரேபிய அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்கள் ஒரு மாணவனுக்கு 2 கிலோ என்ற அடிப்படையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர்களின் போசாக்கினை மேம்படுத்தவும் நாட்டின் முட்டை உற்பத்தியை அதிகரிக்கவும் என ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் பாடசாலை உணவு செயற்றிட்டத்தில்உள்ளடக்கப்பட்டுள்ளசகலமாணவர்களுக்கும்வாரத்துக்கு2முட்டைவீதம்வழங்கப்படஉள்ளது.

ஒரு முட்டைக்கு 8 ரூபாய் வீதம் செலுத்தி பாடசாலைகள் முட்டைகளை கொள்வனவு செய்து மாணவர்களுக்கு அவித்து உணவுடன் வழங்கும்படி அதிபர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே பாடசாலைகள் உடனடியாக முட்டை வழங்கும் நடவடிக்கைகளை வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுமதியை பெற்று உடன் ஆரம்பிக்கலாம்.

மேலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் மாணவர்களின் போசாக்கினை அபிவிருத்தி செய்யவும் நாட்டின் பசும்பால் உற்பத்தி, பாவனை என்பவற்றை ஊக்குவிக்கவும் என பாடசாலை மாணவர்களுக்காக தினமும் பசும்பால் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு மாணவர்க்கு 150 மி.லீ. என்ற அடிப்படையில் ஒரு லீற்றர் பாலை ரூபாய் 50 வீதம் கொள்வனவு செய்து பாடசாலைகளில் பாலை காய்ச்சி மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. (எ)

## நல்லிணக்கம் ஏற்...

வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இச் சந்திப்பு தொடர்பில் வில்லியம் ஹேக் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள தகவலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் கரிசனைக்குரிய சகல விவகாரங்கள் தொடர்பிலும் உறுதியாகவும் வெளிப்படையாகவும் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் தனது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது எந்த விவகாரங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சருடன் பேசப்பட்டது என்பது தொடர்பில் வில்லியம் ஹேக் எதனையும் குறிப்பிடவில்லை.

ஆயினும் கரிசனைக்குரிய சகல விவகாரங்கள் என அவர் குறிப்பிட்டுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் இனங்களுக் கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புக்கூறல் அவசியம் என பிரித்தானியா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை தெரிந்ததே.

லண்டனுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரித்தானிய அரசாங்கத்தின் சார்பில் அதிகாரபூர்வமாக எவரும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## புதிய போர்க்குற்ற...

வெளியான புதிய போர்க்குற்ற ஆதாரங்கள் என்ற தலைப்பில் இவ்வூடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிடைத்துள்ள வீடியோவில் ஆடைகள் களையப்பட்ட நிலையில் டசின் கணக்கான பெண்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் அதிகமான தமிழ் மக்களின் உடலங்களின் முன்பாக படைத்தரப்பினர் மகிழ்ச்சியாக நிற்பது பதிவாகியுள்ளது.

அத்துடன் கறுப்பு, வெள்ளையில் கைதொலைபேசியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சாரைசாரையாக நூற்றுக்கும் அதிகமான உடலங்கள் அடுக்கிவிடப்பட்டிருப்பதை காட்டுகின்றன.

இவற்றில் சில ஆண்களின் உடலங்கள் விடுதலைப் புலிகளின் சீருடையுடனும், பெரும்பாலான உடலங்கள் சாதாரணமான உடையுடனும் காணப்படுகின்றன.

படைத்தரப்பினர் வழக்கமாக பயன்படுத்தும் இணைய நிலையம் ஒன்றில் பணியாற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் மூலமே இந்த ஆதாரங்கள் பெறப்பட்டுள்ளன. ஒரே கைத்தொலைபேசியில் எடுக்கப்பட்டுள்ள 32 காணொளிகளையும், 26 புகைப்படங்களையும் தி இன்டிப்பென்டன் பார்வையிட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான இப் புதிய ஆதாரங்கள் குறித்து ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜெயசேகரவிடம் இவ்வூடகம் தெரிவித்தபோது, இது அரசிற்கும் படைத் தரப்பினருக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சியென்று கூறியுள்ளார்.

அதேவேளை, இந்த ஆதாரங்கள் உண்மையானவை என்றே தான் நம்புவதாக லண்டனைச் சேர்ந்த வழக்கறிஞர் வாசுகி முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

பெண்கள் கொல்லப்படுவதற்கு முன்னர் பாலியல் வல்லுறவுக்கு அல்லது துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னர் உடலங்களை நிர்வாணப்படுத்தியிருக்க வேண்டும் என வாசுகி முருகதாஸ் இது குறித்து தெரிவித்துள்ளார். (எ-11)

## வன்னியில் கற்பிக்கும் ஆசிரியர்...

விசேட போக்குவரத்துக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் வழிகாட்டலில் வட மாகாண சபை பேருந்துக்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து இச்சேவையினை மேற்கொள்ளவுள்ளன. இப்போக்குவரத்து சேவையினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, மன்னார் ஆகிய வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்விசேட போக்குவரத்து ஏற்பாடானது இரண்டு பிரிவுகளாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தினமும் போக்குவரத்து செய்யும் ஆசிரியர்களின் நன்மை கருதி காலை 6 மணிக்கு யாழ்.நகரிலிருந்து புறப்படும் பேருந்துகள் குறித்து பாடசாலைகள் வரை பயணித்து மீளவும் பி.ப. 3.00 மணிக்கு குறித்த பாதை வழியாக யாழ்.நகரப் பகுதியினை பி.ப. 5 மணிக்கு வந்தடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வார இறுதி நாட்களில் பயணம் செய்யும் ஆசிரியர்களின் நன்மை கருதி திங்கட்கிழமை காலை 5 மணிக்கு யாழ். நகர பகுதியிலிருந்து புறப்படும் பேருந்துகள் குறித்த பிரதேசங்களை சென்றடைவதோடு வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அப்பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அதே பாதைவழியாக வந் தடைய போக்குவரத்து ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

முதலாம் இலக்க பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு பூநகரி, பரமன்கிராய், பூநகரி ம.வி., செம்பன்குன்று, ஜெயபுரம் ம.வி., கிராஞ்சி, வேரவில் ஊடாக காலை 8 மணிக்கு வலைப்பாடு சென்றடைவதோடு மீண்டும் அதே பாதை வழியாக பி.ப. 3 மணிக்கு புறப்பட்டு யாழ்.நகரப் பகுதியினை பி.ப. 5 மணிக்கு வந்தடையும்.

இரண்டாம் இலக்க பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு பரந்தன் சந்தி வரை பயணித்து முல்லைத்தீவு வீதி, சென் அன்ரனீஸ் ம.வி, முரசுமோட்டை, கண்டாவளை ம.வி., நாகேந்திரா வித்தியாலயம், கட்டைக்காடு, நாகேஸ்வரி வித்தியாலயம், தர்மபுரம், சுண்டிக்குளி சந்தி, கல்லாறு, பிரான்பற்று, அம்பிகை வித்தியாலயம் ஊடாக காலை 8 மணிக்கு குமாரசாமிபுரம் சென்றடைவதோடு மீண்டும் அதே பாதை வழியாக பி.ப. 3 மணிக்கு புறப்பட்டு யாழ். நகரப் பகுதியினை பி.ப. 5 மணிக்கு வந்தடையும்.

மூன்றாம் இலக்க பேருந்து பருத்தித்துறையிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு பரந்தன் சந்தி வரை பயணித்து முல்லைத்தீவு வீதி, விஸ்வமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு ஊடாக காலை 8 மணிக்கு முல்லைத்தீவு சென்றடைவதோடு மீண்டும் அதேபாதை வழியாக பி.ப. 3 மணிக்கு புறப்பட்டு யாழ். நகரப் பகுதியூடாக பருத்தித்துறையினை வந்தடையும்.

நான்காம் இலக்க பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து திங்கட்கிழமை மு.ப. 5 மணிக்குப் புறப்பட்டு பூநகரி ஊடாக மு.ப. 8 மணிக்கு மன்னார் சென்றடையும். மீண்டும் அதே பாதைவழியாக வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு புறப்பட்டு யாழ்.நகரப் பகுதியினை பி.ப. 5 மணிக்கு வந்தடையும்.

5ஆம் இலக்க பேருந்து யாழ்.நகரப்பகுதியிலிருந்து திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு புறப்பட்டு பூநகரி, வெள்ளாங்குளம், மூன்றாம்பிட்டி, அந்தோனியார் குளம், இலுப்பைக்கடவை, கூவுரை, கோவில் குளம், பள்ளமடு, பெரிய மடு, நாயாறு சந்தி, பாப்பாமோட்டை, அடம்பன், ஆண்டாங்குளம், கருங்கண்டல், வட்டாங்கண்டல் ஊடாக காலை 8 மணிக்கு பரப்பாங்கண்டல் சென்றடையும். மீண்டும் அதேபாதை வழியாக வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு புறப்பட்டு யாழ்.நகரப் பகுதியினை பி.ப. 5 மணிக்கு வந்தடையும்.

6ஆம் இலக்கப் பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து திங்கட்கிழமை காலை 5 மணிக்கு புறப்பட்டு மாங்குளம் ஊடாக காலை 8 மணிக்கு துணுக்காய் சென்றடையும்.

மீண்டும் அதேபாதை வழியாக வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்குப் புறப்பட்டு யாழ். நகரப்பகுதியினை பி.ப. 5 மணிக்கு வந்தடையும்.

வடமராட்சி பிரதேசத்தினைச் சேர்ந்த ஆசிரியர்கள் மூன்றாம் இலக்க பேருந்தில் பயணம் செய்து கொடிகாமம் சந்தியில் தமது பயணப்பாதைக்கு ஏற்றவாறு உரிய பேருந்துகளில் பயணிக்க முடியும். இவ்விசேட பேருந்து சேவைகள் மூலம் ஆசிரியர்களின் பயணம் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கு கூடுதலான நேரம் பாட வேளைகளை கற்பிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பேருந்து சேவைகள் வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இச் சேவையினை குறித்த வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (எ)

## வீட்டுடன் காணி விற்பனை

பருத்தித்துறை தும்பளை பிரதான வீதியில் Hartley College, வேலாயுதம் மகா வித்தியாலயம் மற்றும் சிவப்பிரகாசம் வித்தி யாலயம் ஆகிய பிரபல பாடசாலைகளுக்கு மத்தியிலும், Pt. Pedro பிரதேச சபை, மா நகர சபை, S.L.T.B, Point Pedro Town மற்றும் சிவன் கோவிலுக்கு மிக அண்மையாகவும் அமைந்துள்ள 4 1/2 பரப்பு விஸ்தீரணம் கொண்ட றோட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. இதனை முழுமையாகவோ அன்றி 1 1/2 பரப்பு அடங்கிய 3 கூறுகளாகவோ விற்க முடியும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்

S. Rajaratnam, Manal lane, தும்பளை, Pt. Pedro.

தொடர்பு கொள்ள வேண்டிய T.P. 0776270133 & 0779230396

(8589)


## அமைச்சர் கூரேக்கு எதிரா...

காலையே சென்னை வழியாக கொழும்பு திரும்பினார் கூரே.

அவர் சென்றுவிட்டது தெரியாத ஆர்வலர்கள் அவர் தங்கியிருந்த ஹோட்டலின் முன்பும் மத்திய ஆராய்ச்சி நிறுவனம் முன்பும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியபோது 50 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஜனவரியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினர் திருக்குமரன் நடேசன் ஆலய வழிபாட்டிற்காய் இராமேஸ்வரம் சென்ற போது கடும் எதிர்ப்புக் கிளம்பியதையும் தொடர்ந்து தமிழக முதல்வர் ஜெயலலிதா எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் தமது அரசிற்குத் தெரிவிக்காமல் இலங்கைப் பிரமுகர்கள் தமிழகம் வருவதைத் தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (எ-11)


## யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்ப்பாணக்கிளை உத்தியோகத்தர்கள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற காப்புறுதி விருதான MDRT இற்கு தகுதி பெற்றுள்ளனர்

union assurance
Trust in your tomorrow, today.


S.வைஷ்ணவி (COT)


N.பிரகாஷ் (MDRT)


M. ஜெயமதன் (MDRT)

வாழ்த்துவோர்:-
யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர், விற்பனை முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்

(C-184)

## பணிப்பெண் தேவை

யாழ். நகர சபை எல்லைக்குட்பட்ட வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை.

TP: 0775438610

(8595)

## யாழ் நகரில் ..... உங்கள் அனைத்து வைத்திய சேவைகளுக்கும் ...... சாந்தம் வைத்தியசாலை

வெளிநோயாளர் பிரிவு (OPD)
உள்நோயாளர் பிரிவு (IPD)
ஆய்வுகூட வசதி (Laboratory)
சகல இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் உடனடியாகச் செய்து கொள்ளலாம்!

ECG, Scanning வசதி

Home Visit நடமாட முடியாத நோயாளர்களுக்கு வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்கப்படும்.

விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை

நீரிழிவு நோயாளர்களுக்கான இலவச ஆலோசனை!

வெகுவிரைவில் சத்திர சிகிச்சை, மகப்பேற்று விடுதி ஆரம்பம்!

இல. 126, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 567 6577

## D. சேனாதிராஜா அன் சன்ஸ்

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குமிடம் பல் கட்டுமிடம் எமது விசேட சலுகைகள் அனைத்து Latest Frame கண்ணாடிகளும் 25% கழிவுடன் மாணவர்கள், அரச திணைக்கள ஊழியர்களுக்கு மேலும் பல சலுகைகள் எம்மிடம் கண்ணாடி எடுப்பவர்களுக்கு பெறுமதியான Sun Glass ஒன்று இலவசம்.

இல. 373, கஸ்தூரியார் வீதி,
உதயன் பத்திரிகை பணிமனைஅருகில்
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: S. Anantharaja M.D.H

(8588)

## நம்பமுடியாத விலையில்..... CCTV Camera





SECURITY SOLUTION FOR EVERY ONE

உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும் சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன்

உங்களுடன் நாம்

- Internet, Mobile Phone மூலம் எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட கால உத்தரவாதம்
- விற்பனைக்கு பிந்திய சேவை

மேலதிக விபரங்களுக்கு 075 9997798

HOTLINE
021 5 676767



AMARON TAIWAN HD TECHNOLOGY AVTECH

+ மிகத் துல்லியமான 24 மணிநேர Video பதிவு.
+ இலகுவான கண்காணிப்பு வசதி Monitor / TV மூலம்.
+ கணணித்(Computer)தேவை அவசியமற்றது.
+ பதிவுசெய்யப்படும் Videoக்ளை கடவுச்சொல் (Password) மூலம் பாதுகாக்கும் வசதி.

aj SYSTEMS
Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner
AJ SYSTEMS I (PVT) LTD

யாழ்ப்பாணம். : இல. 315.1/2 பலாலி வீதி. பரமேஸ்வராச் சந்தி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
வவுனியா : இல. 70,புகையிரத நிலைய வீதி,வைரவப்புளியங்குளம், வவுனியா.
Tel : 0212219234 Fax : 0212219235 email : info@aj-sys.lk web : www.aj-sys.lk

ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் சரணம்
ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ



## ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின் 36 ஆவது திருக்கல்யாணதினம் லோக கல்யாண மஹோற்சவமும்

## WEB CAST தரிசனமும்

அன்பர்களே!

சம்பூர்ண அவதார புருஷர்களாகிய ஸ்ரீ அம்மாவும் ஸ்ரீ பகவானும் உலக மக்களின் வாழ்வில் இடர்களை நீக்கி ஜீவன் முக்தியளிக்க பூவுலகில் அவதரித்துள்ளனர். ஸ்ரீ அம்மா பகவானின் திருக்கல்யாண தினத்தை லோக கல்யாண மஹோற்சவமாக கொண்டாட திருவருள் பாலித்துள்ளது.

இடம்:- திவ்ஜ ஜீவன சங்க மண்டபம்
(சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர்)
காலம்:- 09.06.2012 சனிக்கிழமை,பி.ப 2.30 மணி
WEB CAST தரிசனம் பி.ப. 5.30 மணி

கணவன் மனைவியின் ஆன்மீக மலர்ச்சியே திருமணத்தின் மையக் கருத்தாகும் என வேதங்கள் கூறுகின்றன. சர்வமங்களகரமான கடவுளின் கல்யாண தினமான "லோக கல்யாண" நாளில் அனைவரும் குடும்ப சமேதரராய் கலந்து அருளாசி பெறும் பாக்கியத்தை ஸ்ரீ அம்மா பகவான் உலக மக்களுக்கு அருளியுள்ளனர்.

இன , மத பேதமின்றி இவ்வைபவத்தில் கலந்து ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்ரகத்தை பெறும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"
"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
ஸ்ரீ அம்மா பகவான்
சத்சங்கங்களின் ஒன்றியம்
யாழ். மாவட்டம்

(8582)

## அபிகனி புத்தக நிலையம்



தரம் 1 தொடக்கம் A/L வரைக்குமான சகல பாட பயிற்சி புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தரம் 1 – 5 வரைக்குமான 2ம் தவணைக்குரிய கற்சுமி வெளியீட்டின் சுட்டி பரணி, தரம் 5 புலமைப்பரீட்சைக்கான வெற்றித் தேர்வு, அன்பழகன் வெளியீடு, புலரி மற்றும் ஏனைய வெளியீடுகளுக்கும் இவ் ஆண்டு O/L பரீட்சைக்கான விண்ணப்பங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

அபிகனி புத்தக நிலையம்
சுண்டிக்குளம் சந்தி, விசுவமடு.
தொ. இல.:- 0775144093

என்றும் நாம் உங்களோடு

(C-185)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.